நம்நாடு

The 'Nam Nadu' A Tamil Daily. விலை
The Official Organ of the D. M. K. 12 காசு

ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ. எம்.பி.

பதிவு எண்: எம். 6311 ★ சென்னை: திருவள்ளுவராண்டு 1998 சித்திரை 7 (20—4—67) வியாழன் ★ நிறுவியது: 1953
மலர் 14—இதழ் 259 ★ வெளியூர்: திருவள்ளுவராண்டு 1998 சித்திரை 8 (21—4—67) சென்னி ★ தொலைபேசி: 51331

'இந்தி ஆதிக்கம் எரிச்சலூட்டுகிறது'

'அடித்தளத்தையே அது தாக்குகிறது'

'அடிப்படைக் கொள்கைகளைத் தி. மு. கழகம் கைவிடவில்லை'— அறிஞர் அண்ணா விளக்கம்

"குறிப்பிட்ட தனியொரு கருத்தைப் பரப்பி, அதனால் மட்டுமே நாங்கள் பலம் தேடிக்கொண்டதாக நினைப்பது தவறு! எமக்குள்ள ஆதரவு மக்களிடையே ஆழமாக வேர்விட்டிருக்கிறது!"

இவ்வாறு, தனித் திராவிட நாட்டுக் கோரிக்கையைக் கைவிட்ட போதிலும், 'பொதுத் தேர்தலில் தி. மு. க. வென்று ஆட்சிபீடத்தில் அமர்ந்திருப்பதேன்?' என்ற 'போஜனு' நிருபரின் கேள்விக்கு அண்ணா பதிலளித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"தனித் திராவிட நாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டபோதிலும் தனது மூன்று அடிப்படைக் கோரிக்கைகளைத் தி. மு. க. விடவில்லை—

"எங்களுடைய மொழியும், கலாச்சாரமும் காப்பாற்றப்பட வேண்டும்.

"இந்தியக் கூட்டாட்சிக்குள் எங்கள் மாநிலத்திற்குரிய அரசியல் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

"எங்களுடைய பொருளாதார முன்னேற்றத்திற்கு உத்தரவாதம் அவசியம்.

இவைதான் அக்கோரிக்கைகள்!

"தனி நாடாகப் பிரிந்தால்தான் இத்தகு பாதுகாப்புக் கிடைக்குமென முதலில் நினைத்தோம்; ஆனால், சீனப் படையெடுப்பிற்குப் பிறகு இந்தியாவின் ஒரு பகுதியாகச் செயல்படுவதன் அவசியத்தை உணர்ந்துகொண்டோம்.

"இன்று, இந்தி ஆதிக்கம் பற்றியதே எமது கவலையெல்லாம். இந்தி, மத்திய அரசின் ஆட்சி மொழியாக ஏற்கப்படுவது எமக்கு எரிச்சலூட்டுகிறது! எங்களுடைய கலாச்சாரத்தின் அடித்தளத்தையே அது தாக்குவதாக நாங்கள் கருதுகிறோம்.

"காலப் போக்கில் அனைத்திந்தியாவிற்கும் ஒரு பொதுத் தொடர்பு மொழி உருவாக வேண்டும்; அதுவரை ஆங்கிலமே இணைப்பு மொழியாக நீடிக்க வேண்டும். 14 தேசிய மொழிகளுக்கும் சமமான மதிப்பு அளிக்கப்பட வேண்டும்."

இருந்ததை இழந்ததால் ஏற்பட்ட கோபம்!

இதனால் நமக்குத்தான் இலாபம்!

"காங்கிரசிலுள்ள ஒரு சிலர்', திட்டிப் பேசுவதாக இங்கு குறிப்பிடப்பட்டது. 'சுபாவம் கனத்தில் மருது' என்று சொல்வார்கள். அந்தச் சுபாவம் படிப்படியாக மாறலாம்; அல்லது மாறாமல் அப்படியே இருக்கலாம்!

"இழிமொழிகளை — தூற்றுதல்களைக் கேட்டவர்கள்தான் நாம்! அதனால் நமக்கு இலாபம்தானே தவிர, நட்டம் அல்ல!

"காங்கிரசில் ஒரு சிலர் அப்படிப் பேசுகிறார்கள் என்றால், அதைக் கண்டு வருந்தக் கூடாது! கையில் இருந்ததை இழந்துவிட்டவர்கள் எரிச்சல் படுவது இயற்கைதான்! கடையில் வாங்கி வந்த பண்டத்தை எவனாவது ஒன்று பறித்துக் கொண்டு போனால், எவனுமீது மட்டும் கோபம் வராது; வழியே செல்வோர்—'என்ன நடந்தது' என்று கேட்போர்—எல்லோர் மீதும் கோபம் ஏற்படும்!

"அதற்கே அப்படி என்றால், இருபது ஆண்டுகளாக இருந்த பதவியை எடுத்துக்கொண்டு போனால், ஆத்திரம் வராதா, என்ன?

"காங்கிரசார் சார்பில் நான் கேட்கிறேன்—இருக்கும் மாநிலங்களை ஆளுக்கு ஒன்றாக எதிர்க் கட்சியினர் எடுத்துக் கொண்டு போனால் ஆத்திரம் வருமா, வராதா?"

—முதலமைச்சர் அண்ணா
(மதுரைக் கூட்டத்தில்)

அடினார் காலமானார்

மேற்கு ஜெர்மனியின் முன்னாள் தலைமையமைச்சர் கோன்ராட் அடினார் ரோயன்டர்ப்பில் காலமானார்.

இரண்டாவது உலகப் பெரும்போரில் நாசமடைந்த மேற்கு ஜெர்மனியை முன்னேற்றமடைந்த நாடாக்கிய பெருமை, அடினாரைச் சாரும். பதினான்கு ஆண்டு காலம் தலைமையமைச்சர் பதவியில் அடினார் இருந்தார்.

மதுரை முத்து அவர்களுக்கு வெற்றிக் கேடயம்—தங்கப் பதக்கம்!

மதுரை, ஏப். 16—

மதுரை மாவட்டத்தில் பொதுத் தேர்தலில் தி. மு. கழகத்திற்கும், தோழமைக் கட்சிகளுக்கும் மகத்தான வெற்றி தேடித் தந்த மாவட்டச் செயலாளர் எஸ். முத்து எம்.எல்.சி. அவர்களுக்கு அறிஞர் அண்ணா அவர்கள் தங்கப் பதக்கம் அணிவித்து வெற்றிக் கேடயமும் வழங்கினார்.

ஒரே கட்சி ஆட்சி இந்தியாவுக்கு ஏற்றதல்ல

திட்டக் குழு ஒரு கூட்டமைப்பாகச் செயல்பட வேண்டும்

திட்டங்கள் சிற்றூர்களிலிருந்து ஆரம்பமாக வேண்டும்

"இந்தியத் திட்டக் குழு மாநிலங்களிலும் பணியாற்றலாம். மாநிலத் திட்டங்களுக்கு ஆலோசனை கூறும் விதத்தில் திட்டக்குழு செயல்பட்டால், அதை நான் விரும்பி வரவேற்பேன். மாநிலங்களின் வளர்ச்சிக்குத் திட்டக் குழு பக்கபலமாக நின்று அதிக உதவிகளைச் செய்யவேண்டும்.

"தேசியத் திட்டங்களை வகுப்பதிலும், மாநில மட்டத் திட்டங்களை உருவாக்குவதிலும் மத்திய அரசின் பொறுப்புணர்ச்சியே தலைமையானது.

"கட்டுப்பாடுகளுக்கு உட்படாத சுதந்தர உணர்ச்சியோடு மாநில அரசுகள் திட்டங்களை வகுக்கும் புதிய சூழ்நிலை அரும்பவேண்டும். அதற்கேற்ற வகையில் திட்டக் குழுவிலும், மத்திய அரசின் நிர்வாகத்திலும் 'மத்திய அரசு மயமாக்குதல்' எனும் கொள்கை பின்பற்றக்கூடாது.

"மக்களின் விருப்பங்களைக் கண்டறிந்து, அவற்றின் அடிப்படையில்தான் நாம் திட்டங்களை உருவாக்க வேண்டும். அப்போதுதான் நமது திட்டங்கள் நல்ல பயனை விளைவிக்கும்.

"திட்டங்கள் முதலில் சிற்றூர்களில் வகுக்கப்பட வேண்டும்; பிறகு மாநில அரசு, அவைகளைப் பரிசீலிக்க வேண்டும்; இறுதியில்தான் மத்திய அரசு திட்ட அரங்கில் தனது பங்கை ஏற்கவேண்டும்.

"மாநில அரசுகள், சிற்றூர்களில் தொடங்கப்படும் முன்னேற்ற வேலைகளில் ஈடுபட்டு ஒத்துழைக்க வேண்டும். திட்டக் குழு ஒரு கூட்டமைப்பைப் போலச் செயல்பட வேண்டும்.

"ஒரு கால்வாய்த் திட்டத்திற்குக்கூட மத்திய அரசை மாநில அரசு எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. வெறும் திட்டப் பார்வையோடு மட்டுமின்றி, மாநில நலத்திற்கான பொதுப் பார்வையோடு மத்திய அரசு நிதி ஒதுக்குவதற்குத் திட்டக் குழு வகை செய்யவேண்டும்.

"மத்திய—மாநில அரசுகளிடையே நிலவும் கருத்து வேறுபாட்டினால் ஏற்படும் மோதல் தவிர்க்க முடியாததல்ல; மனம்விட்டு விவாதிப்பதன்மூலம் கருத்து வேறுபாடுகளைப் போக்கிக்கொள்ள முடியும்.

"இந்தியாவிற்கு ஒரே கட்சி ஆட்சி ஏற்றதல்ல. ஒரு கூட்டாட்சியில், அந்தக் கூட்டாட்சியை வலியுறுத்தும் அரசியல் சட்டத்தின்கீழ் ஒரு கட்சி ஆட்சியே எப்போதும் நடைபெறுமென்று எதிர்பார்க்கமுடியாது.

"இந்தியக் கூட்டாட்சிக்கு உட்பட்ட பல மாநிலங்களைப் பல்வேறு எதிர்க் கட்சிகள் ஆளும் சூழ்நிலை உருவாகிவிட்டது. பல மாநிலங்களில் கூட்டு அமைச்சரவைகள் ஏற்பட்டிருப்பதை, 'இந்திய அரசியலின் இடைக்காலத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சி' என்றே நான் கருதுகிறேன்.

"மத்திய—மாநில அரசுகளின் தொடர்பு அதிகப்படுவதற்கு நான் எந்தத் திட்டத்தையும் கூற விரும்பவில்லை; ஆனால் அடிக்கடி கருத்து வேறுபாடுகள் விவாதிக்கப்பட வேண்டும்.

"பல முதலமைச்சர்கள்கூடி விவாதிப்பதன் மூலம் ஒரு நிறுவனத்தின் ஆற்றலைப் பெறமுடியும். இத்தகைய நேரடித் தொடர்பு வெறும் அமைப்பு முறைகளைவிட மிகவும் சிறப்பானது."

—முதலமைச்சர் அண்ணா
('போஜனு' இதழுக்கு அளித்துள்ள பேட்டியில்)

ஏவுகணை வெற்றி

திருவனந்தபுரம், ஏப். 20—

இந்தியாவிலேயே தயாரான முதல் சுதேசி ஏவுகணை சோதனையில், இந்தியா வெற்றியடைந்துள்ளது.

இந்தியாவிலேயே தயாரான ஆய்வுக்கருவிக் கூம்பு பொருந்திய செண்டார் ஏவுகணை, தும்பா தளத்திலிருந்து நேற்று ஏவப்பட்டது.

இரஷ்யாவிலும் தொழிலாளருக்குப் போனசு தரப்படும்

உற்பத்தியைப் பெருக்க ஊக்களிப்பு

★

இரஷ்யாவிலும் போனஸ் தரும் முறை அமுலுக்குக் கொண்டுவரப்படும் என்று தொழிலாளருக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தொழிலாளர்கள் இலட்சிய அளவைவிடக் கூடுதலாக உற்பத்தி செய்வார்களானால், அந்த அதிக உற்பத்தியால் கிடைக்கும் இலாபத்தில் பாதியைப் போனசாகத் தொழிலாளருக்குத் தர சோவியத் அரசு முடிவு செய்திருக்கிறது.

அத்தொகையை அவர்கள் தம் விருப்பம்போல் வைத்துக் கொள்ளவும் அனுமதிக்கப்படுவார்களாம்.

கேரள முதலமைச்சரின் இந்தி அனுபவம்!

★

எர்ணாகுளத்தில் நடைபெற்ற இந்திப் பிரச்சார சபையின் கூட்டமொன்றில் கலந்துகொண்டு பேசிய கேரள முதலமைச்சர் ஈ. எம். எஸ். நம்பூதிரிபாடு, இந்தி பற்றிய தமது அனுபவத்தைக் குறிப்பிட்டதாவது:—

"1921 அல்லது 1920-ல் நான் இந்தி கற்கத் துவங்கினேன்; 45 ஆண்டுகள் அதற்காக முயன்றுவருகிறேன்; ஓரளவுக்கு இந்தியை நான் கற்றிருக்கிறேன்; ஆயினும், இன்னமும் என்னால் இந்தியில் பேச முடியவில்லை! அதைப் பேச என்னுடைய வாழ்நாளில் முடியுமென்றும் நான் கருதவில்லை! ஒருவேளை, அடுத்த பிறவியில்தான் அது கைகூடுமோ என்னவோ!"

'மதுவிலக்கு தோல்வி அடைந்துவிட்டது'

'உண்மையை உணரவேண்டும் காங்கிரசுக் கட்சி'

முன்னாள் அமைச்சர் எஸ்.கே. பாட்டீல் கூறுகிறார்

பம்பாய், ஏப். 20—

மதுவிலக்கை நீக்குவதற்கு முன்னாள் மத்திய அரசாங்க இரயில்வேத்துறை அமைச்சர் எஸ். கே. பாட்டீல் ஆதரவு தெரிவித்திருக்கிறார்.

'மதுவிலக்கை நீக்குவது சரியானதே' என்று கருத்து தெரிவித்த எஸ். கே. பாட்டீல் மேலும் கூறியதாவது:—

"இதற்காக நான், எந்த வேறு நீதியையும் எடுத்துச் சொல்லவில்லை. மதுவிலக்குத் திட்டம் தோல்வி அடைந்துவிட்டது. மதுவிலக்கால் வருமான இழப்பு வேறு ஏற்படுகிறது.

"காங்கிரசல்லாத அமைச்சரவைகள் மதுவிலக்கு பற்றி வெவ்வேறான கொள்கைகளைக் கொண்டிருக்கின்றன; ஆகவே, காங்கிரசு அமைச்சரவைகளும் இதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

"பல இடங்களில் மதுவிலக்கு தளர்த்தப்படும்போது சில இடங்களில் மட்டும் மதுவிலக்கைத் தீவிரமாகக் கடைப்பிடிப்பது நல்லதல்ல!

மதுவிலக்கை நீக்குவதற்கு ராஜாஜி எதிர்ப்புத் தெரிவித்திருப்பதைப்பற்றி குறிப்பிட்டுக் கேட்டபொழுது அவர் குறிப்பிட்டதாவது:—

"மதுவிலக்குக் கொள்கை ஒன்றில் மட்டும்தான் ராஜாஜியும்—காமராசரும்—அண்ணாதுரையும் ஒன்றுபட்டு இருக்கின்றனர்."

"காங்கிரசுக் கட்சி கடந்த பொதுத் தேர்தலில் தோல்வி அடைந்தது நல்லதுதான்; ஏனெனில், காங்கிரசுக் கட்சி தனது கொள்கையின் உண்மையை இப்பொழுதுதான் உணர முடியும்."

பிடிவாதம் காட்டும் மாநிலங்களுக்கு நிதி உதவி கிடைக்காதாம்!

புதுடில்லி உள்துறை அமைச்சகத்தின் ஆணவம் நிறைந்த அறிக்கை

புதுடில்லி, ஏப். 20—

"அரசியல் சட்டப்படி, திட்டக் கொள்கையில் தனது நோக்கத்தை நிறைவேற்றப் பிடிவாதம் காட்டும் மாநில அரசுகளுக்கு நிதியுதவி கிடைக்காது"

இவ்வாறு, மத்திய—மாநில அரசுகளின் உறவு பற்றி ஆய்வு நடத்திய மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் அறிக்கை ஆணவத்தோடு கூறியிருக்கிறது.

மத்திய அமைச்சரவையின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள இந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:—

"மாநிலங்களில் வேறுபட்ட வரி விதிப்பு முறைகள் உள்ளன. மாநில அரசுகளின் தேவைகள் நிறைவேற்றப்படும்வரை மத்திய அரசு இதில் தலையிடக்கூடாது.

"உணவுச் சிக்கல் அபாயகரமானது. உபரி மாநிலங்கள் பெருந்தன்மை காட்டினால், இச்சிக்கலில் ஓரளவு தீர்வு காண முடியும்.

மாநாடு நடத்த மறுக்கப்பட்ட இடத்தில வெற்றி விழா!

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூன்றாவது மாநில மாநாட்டை நடத்துவதற்கு, இதே பந்தலைத் திடலைக் கேட்டோம்; அப்போதிருந்த காங்கிரசு ஆட்சி, தர மறுத்தது.

"அப்போது நமக்கு மறுக்கப்பட்ட அதே இடத்தில், இன்று நாம் வெற்றி விழாக் கொண்டாடுகிறோம்."

—மதுரை எஸ். முத்து
(தங்கப் பதக்க அளிப்புவிழாவில்)

சென்னைக்குக் காவிரி நீர்

நாளொன்றுக்கு 11 கோடி காலன்

சென்னை, ஏப். 20—

சேலம் மாவட்டத்திலுள்ள ஜேடர்பாளையத்திலிருந்து சென்னை நகருக்குக் காவிரி நீர் கொண்டுவரும் திட்டத்தின்கீழ், தண்ணீரைத் தூய்மைப்படுத்தி விநியோகத்திற்காக அமையும் நிலையம், தென்சென்னைப் பகுதியில் அமைக்கப்படும்.

இதுபற்றிய தீர்மானத்தை சென்னை மாநகராட்சி 19—4—67 அன்று ஒருமனதாக நிறைவேற்றியது.

இந்தத் தீர்மானத்தை தி. மு. க. மாநகராட்சி கட்சித் தலைவர் வி. முனுசாமி கொண்டுவந்தார்.

ஜேடர் பாளையத்திலிருந்து சென்னை நகருக்கு தினசரி 11 காலன் தண்ணீரை கான்கிரீட் பூசிய கால்வாய் மூலம் கொண்டு வருவதற்கான திட்டம் இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருப்பதாகக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

முன்யோசனையற்ற திட்டத்தால் பல கோடி ரூபாய் பாழ்!

இந்தியாவில் 'டிரான்சிஸ்டர்' தயாரிக்கத் தூண்டிவிட்டுக் கைவிரிக்கும் அவலம்

காங்கிரசு ஆட்சியின் சிறு தொழில் வளர்ச்சித் திட்டம் படும்பாடு

புதுடில்லி, ஏப். 20—

குறைந்த விலையில் டிரான்சிஸ்டர்கள் இந்தியாவில் தயாரிக்கப்பட்டன.

கிராமப் பகுதிகளில் இவைகள் பயன்பட வேண்டுமென்றும், அதற்காக அரசு இத்தொழிலில் ஈடுபடுவோருக்கு உதவுமென்றும் அறிவிக்கப்பட்டது.

இத்தொழிலில் ஈடுபட்டவர்கட்கு ஆதாரச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

சிறு தொழில் முன்னேற்றக் குழு ஆணையாளர் இவ்வாறு இத்தொழிலுக்கு முதலில் 'பச்சை விளக்கு' காட்டினார்.

பிறகு சென்ற ஆண்டின் இடைப் பகுதியில் அவர், 'சிவப்பு விளக்கு' காட்டினார்.

இத்தொழிலுக்கான மூலப் பொருள்களை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது; ஆனால் அதற்குரிய வசதிகள் செய்து தரப்படவில்லை.

இதற்கிடையில், ஆண்டுக்கு 50,000 டிரான்சிஸ்டர்கள் உருவாக்கப்பட வேண்டுமென்று வேண்டப்பட்டது.

இதனால் இத்தொழிலில் ஈடுபட்டோருக்குக் கோடிக்கணக்கான பண இழப்பு ஏற்பட்டது.

இதுபற்றிச் சிறு தொழில் வளர்ச்சிக் குழுவிடம் அவர்கள் முறையிட்டுள்ளனர்.

அண்ணாவின் கோரிக்கை வெற்றிபெறுகிறது

ஆறாண்டாகக் காலம்கடத்தப்பட்டது— இப்பொழுதுதான் மத்திய அரசு ஏற்றுக்கொள்கிறது

★

சென்னையில் மருத்துவத்துறை முதுகலை உயர் கல்விக் கழகம்— இட வசதிக்கு 1,000 ஏக்கர் நிலம்பெற்றுத் தர முதலமைச்சர் ஒப்புதல்

சென்னை, ஏப். 20—

சென்னையில் மருத்துவத்துறை முதுகலைக் கல்விக் கூடம் (மருத்துவப் பட்ட பிற்கால மேற்படிப்புக் கழகம்) அமையவேண்டும் என்ற தமிழக அரசு கோரிக்கைக்கு மத்திய அரசாங்க நிதியமைச்சர் இசைவு தந்துள்ளார்.

மருத்துவ முதுகலைக் கல்விக்கூடத்துக்கான 1000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பைப் பெற்றுத் தருவதாக முதலமைச்சர் அண்ணா அவர்கள் உறுதி கூறியுள்ளார்கள்.

இந்தத் தகவலை மத்திய அரசு மருத்துவத் துறைத் துணையமைச்சர் டாக்டர் சந்திரசேகர் கூறினார்.

சென்னை தலைமை மருத்துவமனையில் தலைக் காயத்திற்குச் சிகிச்சை அளிக்கும் பகுதியைத் திறந்துவைத்துப் பேசுகையில் தான் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அண்ணா வலியுறுத்தல்

"மருத்துவ முதுகலைக் கல்விக்கூடம் சென்னையில் நிறுவப்படவேண்டும் இக்கோரிக்கை 6 ஆண்டுகளாக மத்திய அரசிடம் வலியுறுத்தப்பட்டுவருகிறது. இதற்காக 130 ஏக்கர் நிலத்தை மாநில அரசு ஒதுக்கியுள்ளது. இதற்கு ரூ. 5 கோடி தேவைப்படும். இத்தொகையில் ரூ. 2.5 கோடியை மத்திய அரசு தரவேண்டும்."

இவ்வாறு தமிழக அமைச்சரவை அறையில் 19—4—67 அன்று நடைபெற்ற மாநாட்டில் மத்திய அரசின் துணையமைச்சர் சந்திரசேகரிடம், முதலமைச்சர் அண்ணா அவர்களும், சுகாதார அமைச்சர் சாதிக் பாட்சாவும் வலியுறுத்தினர்.

"புதுச்சேரியில் மருத்துவ முதுகலைக் கல்விப் பிரிவு தொடங்கப் போவதால், சென்னையிலும் அதே பிரிவு தேவையில்லை என்று மத்திய அரசு கூறுகிறது. பாண்டிச்சேரி மருத்துவக் கல்லூரியில் அப்பிரிவைத் தொடங்க அதிக நாட்களாகும். அங்கே மருத்துவக் கல்விப் பட்டம் பெற்ற முதல் மாணவர் குழு வெளிவரவில்லை. எனவே, அப்பிரிவைச் சென்னையில் அமைக்கவேண்டும். புதுச்சேரியில் அப்பிரிவு அமைக்கப்பட்டாலும், அது சென்னையுடன் இசைந்து செயல்படும்"

என்று முதலமைச்சர் அண்ணாவும், சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஏ. இலட்சுமணசாமி அவர்களும் வலியுறுத்தினர்.

23,461 சதுரமைல் பஞ்சப் பிரதேசம்!

சுதந்தரத்துக்குப் பின் முதல் தடவையாக பீகார் அறிவிப்பு

பாட்னா, ஏப். 20—

பீகார் அரசு, சில பகுதிகளைப் பஞ்சப் பிரதேசமாக அறிவித்துவிட்டது.

23,461 சதுரமைல் பரப்புள்ள இப்பகுதிகளில், 1,27,33,000 பேர் வாழ்கின்றனர்.

சுதந்தர இந்தியாவின் வரலாற்றில் இப்போதுதான் முதல் தடவையாக ஒரு மாநிலம் தனது பகுதிகளைப் பஞ்சப் பிரதேசமாக அறிவிக்கின்ற அரசியல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இச்சிக்கல் மத்திய—மாநில அரசுகளிடையே முரண்பாட்டை உருவாக்கும் என்று தெரிகிறது.

"சோகத்தோடுதான் நான் இந்த அறிவிப்பைச் செய்கிறேன்"

என்று பீகார் முதலமைச்சர் மகாமாய பிரசாத் சின்கா, நிருபர்களிடம் கூறினார்.

"இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய அவலத்தை எதிர்த்துப் போராடும் பீகாருக்கு, சகோதர மாநிலங்களும், பல்வேறு பொதுப்பணி அமைப்புகளும் பக்கபலமாக நிற்க வேண்டும்"

"இச்சிக்கலிலிருந்து விடுபட—பீகாருக்கு உதவ—மத்திய அரசு கனிவுடன் முன்வர வேண்டும்"

என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

திருவள்ளுவராண்டு 1998 சித்திரை 7 (20—4—67) வியாழன்

மொரார்ஜி தேசாயின் அறியாமை!

இந்தியத் துணைக்கண்டத்தின் துணைத் தலைமை அமைச்சராகவும் நிதி அமைச்சராகவும் இருக்கின்றவர் மொரார்ஜி தேசாய். இதுவுமன்றி, இன்றுள்ள அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள் அனைவரிலும் முதியவரும் ஆவார்.

ஒவ்வொரு மாநிலத்திலும் இருந்திடக்கூடிய அரசியல் கட்சிகளின் அடிப்படைக் கொள்கைகளையும், முற்கால நடவடிக்கைகளையும், இன்றைய செயல்முறைகளையும், தேசாய்போல் அரசாங்கத்தில் முக்கிய பொறுப்பேற்றிருக்கின்ற ஒருவர், குறைந்தபட்சமாகவாவது தெரிந்துகொண்டிருக்க வேண்டும். இப்படித் தெரிந்துகொண்டிருப்பதுதான், தாம் ஏற்றுள்ள பதவியைத் திறம்பட நிர்வகித்துவருவதற்கு ஒருவருக்குத் துணைபுரியவும் கூடும்.

ஒவ்வொரு மாநிலத்திலும் இருந்துவரக்கூடிய அரசியல் கட்சிகளின் மூல நோக்கங்களையும், அக்கட்சிகளின் முற்கால—நிகழ்கால நடைமுறைகளையும், இன்றையத் துணைத் தலைமை அமைச்சராக இருந்துவருகின்ற தேசாய் அவர்கள், தெரிந்துள்ளவராக இருப்பார் என்றுதான் எவரும் நம்புவர். ஆனால் தேசாய் அவர்களோ, தெரிந்துகொள்ளவேண்டியதை இன்னமும் தெரிந்துகொள்ளாமல் இருக்கின்றார் என்பது வியப்பாக இருக்கிறது.

மூன்று தினங்களுக்குமுன் பம்பாய் நகரில், மொரார்ஜி தேசாய், செய்தியாளர்களைச் சந்தித்திருக்கின்றார். செய்தியாளர்கள், மற்பல கேள்விகளை அவரிடம் கேட்டிருக்கின்றனர்.

தங்கக் கட்டுப்பாடு—அக விலைகளைக் கட்டுப்படுத்துவது—ஊதிய உயர்வை முடக்குவது—மாநிலங்களின் அதிகாரத்தைப் பெருக்குவதற்கு அரசியல் சட்டத்தைத் திருத்த இயலாமை—பற்றுக்குறை வரவு-செலவுத் திட்டத்தின் விளைவு—காங்கிரசுக் கட்சியின் இன்றைய – நாளைய நிலை—ஆகிய பல்வேறு பிரச்சினைகளைக் குறித்தெல்லாம், தம்மிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு, துணைத் தலைமை அமைச்சர் பதிலளித்திருக்கின்றார். எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு, அவர் கூறிய விளக்கங்கள் ஒவ்வொன்றும் விவாதத்துக்குரியது என்றாலும், 'நிதி அமைச்சர் என்ற முறையில் அவ்விளக்கங்களை அவர் கொடுத்திருக்கின்றார்' என்ற முறையில், முடிவு கட்டிக்கொள்ள முடியும்.

ஆனால், 'சிவசேனை'யைக் குறித்து, தம்மிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு, தேசாய் கூறியிருக்கின்ற பதில், துணைத் தலைமை அமைச்சர் என்ற பொறுப்பான இடத்தில் உள்ள ஒருவர் கூறக்கூடிய பதிலாக இல்லை. இதைவிட, அவர் கூறிய பதிலில் மிகமிக மோசமாக இருப்பது, 'சிவசேனை'யை நமது முன்னேற்றக் கழகத்துடன் இணைத்துக் கூறியுள்ள விளக்கமாகும்.

பம்பாய் நகரத்தில் குடியேறிப் பாடுபட்டு உழைத்துவருகின்ற தென்னக மக்களுக்கு எதிராகத் தீவிரமான கிளர்ச்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற அமைப்புத்தான் 'சிவசேனை' என்பதாகும். அந்த அமைப்பு, பிப்ரவரியில் நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது, பம்பாய் நகரத்தில் தென்னக மக்களால் நடத்தப்பட்டுவருகின்ற உணவு—சிற்றுண்டி விடுதிகளைச் சூறையாடியும், அவர்களுடைய குடியிருப்புக்களைத் தாக்கியும், சொத்துகளுக்கு நாசம் விளைவித்தும் இருக்கிறது. இத்துடன், தென்னக மக்களைத் தாக்கி இம்சித்தும் இருக்கிறது அவ்வமைப்பு. இன்றும், தென்னக மக்களுக்குத் தொல்லை கொடுப்பதையே அந்த அமைப்பு தொடர்ந்து செய்துவருகிறது.

தென்னக மக்களுக்கு எதிராக 'சிவசேனை' செய்துவருகின்ற அட்டூழியங்களைக் கண்டித்து, நாட்டின் நல்லறிவாளர்கள் பலர் ஏற்கனவே அறிக்கையும் வெளியிட்டிருக்கின்றனர். 'சிவசேனை'யின் விரும்பத்தகாத வெறிச் செயல்கள் குறித்து, மாராட்டிர முதலமைச்சரிடம் ஏற்கனவே முறையிடப்பட்டும் உள்ளது.

பம்பாய் நகரத்திலுள்ள தென்னக மக்களுக்கு எதிராகச் செயல்பட்டு வருகின்ற இந்தச் 'சிவசேனை'யின் விரும்பத்தகாத இச்செயல்கள் பற்றித்தான்—'இந்தியத் துணைத் தலைமை அமைச்சர்' என்ற முறையில்—தம்முடைய கருத்தைக் கூறும்படி தேசாய் அவர்களிடம், செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். இக்கேள்விக்குப் பொறுப்பான பதவியிலுள்ள தேசாய், பதிலளிப்பதற்குமுன் என்ன செய்திருக்க வேண்டும்?—'சிவசேனை'யின் வெறித்தனத்தை முதற்கண் கண்டித்திருக்க வேண்டும்.

தேசாய் அவர்களோ, 'சிவசேனை'யின் வெறிச்செயல்களை மறைமுகமாகக்கூடக் கண்டிக்கவில்லை. அவ்வாறு அவர் கண்டிக்காது இருந்ததைக்கூட மறந்துவிடலாம்; ஆனால், கண்டிக்க வேண்டிய அவர் கண்டிக்காததுடன்—'சிவசேனை'யின் வெறிச் செயல்களுக்கு வரவேற்புக் கூறுவதேபோல் — 'சிவசேனை'யுடன் நமது முன்னேற்றக் கழகத்தைத் தொடர்புபடுத்தி, துளியும் பொருந்தாத முறையில் கழகத்தைப் பழித்திருக்கின்றார்.

"பம்பாய் நகரத்திலிருக்கின்ற தென்னக மக்கள் அனைவரையும் அங்கிருந்து வெளியேற்றிவிட வேண்டும்" என்பதைக் குறியாகக் கொண்டு இயங்கிவருவதுதான் 'சிவசேனை' என்ற அமைப்பு; தான் கொண்ட இக்குறிக்கோளைச் செயல்படுத்தும் கருத்தில்தான், அங்குள்ள தென்னக மக்களைத் தாக்கியும், அவர்களுடைய உடைமைகளுக்கு நாசத்தை விளைவித்தும் வருகிறது.

'சிவசேனை' பற்றிய உண்மை இவ்வாறு இருக்க, இதில் நூற்றுக்கு நூறு மாறுபட்ட அரசியல் அமைப்பாக இயங்கிவந்து, தமிழக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு ஒப்பற்ற சனநாயகப் பாதையில் சென்றுகொண்டிருக்கின்ற நமது கழகத்தை, அந்தச் 'சிவசேனை'யுடன் இணைத்துப்பேச, மொரார்ஜி தேசாய்க்கு எப்படித்தான் மனச்சான்று இடமளித்ததோ?

மொரார்ஜி தேசாய் கருத்துப்படியே—'சிவசேனை'யைப் போன்றதே முன்னேற்றக் கழகமும் என்பதை வாதத்திற்காக ஒப்புக்கொள்வதாக இருந்திட்டாலும்—துணைத் தலைமை அமைச்சர் என்ற முறையில்—'சிவசேனை'யின் வெறிச்செயல்களை அவர், திட்டவட்டமாகக் கண்டித்தல்லவா இருக்கவேண்டும்? தம் கூற்றுப்படி, வேறு ஒரு அமைப்பு வன்முறைச் செயல்களில் ஈடுபடுகிறது என்பதற்காக, வன்முறைச் செயல்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற வேறு ஒரு அமைப்பை, தேசாய் கண்டிக்காமல் விட்டிருப்பது முறையாகுமா?

முன்னேற்றக் கழகத்துக்கு உடன்பாடில்லாத ஒரு விரும்பத்தகாத போக்கை அவ்வமைப்பின்மீது ஏற்றிவைத்து—அதைச் சுட்டிக்காட்டி—வெளிப்படையாக வெறிச்செயல்களில் ஈடுபாடு கொண்டிருக்கின்ற 'சிவசேனை'யின் போக்கை நியாயப்படுத்த, தேசாய் ஏன் முயற்சிக்கின்றார் என்பதை நாமறியோம்!

பம்பாயிலுள்ள தென்னக மக்களை அங்கிருந்து வெளியேற்றிவிட வேண்டும் என்ற ஒரே நச்சுக் கருத்தை இலட்சியமாகக் கொண்டு உருவெடுத்துச் செயல்பட்டுவரக்கூடிய 'சிவசேனை' என்ற அமைப்புடன் நமது முன்னேற்றக் கழகத்தைத் தொடர்புபடுத்திக் காட்டியிருப்பதன் மூலம், முன்னேற்றக் கழகத்தின்மீது தமக்கிருக்கின்ற அரசியல் காழ்ப்பையும், அறியாமையையும் தேசாய் அவர்கள் வெளியிட்டுக்கொண்டிருக்கிறார் என்றே நாம் தீர்மானிக்க வேண்டியவர்களாகின்றோம்.

நமது முன்னேற்றக்கழகத்தைக் குறித்துத் தாம் கொண்டிருக்கின்ற தவறான கருத்தை, தேசாய் அவர்கள் எவ்வளவு விரைவில் மாற்றிக்கொள்கிறாரோ, அது நாட்டுக்கும் நலம் பயக்கும்—அவருக்கும் நற்பெயரைத் தேடித்தரும்.

கழகத்தைக் குறித்து, வெறும் தேசாய் என்ற முறையில், அவர் தவறாகப் பேசியிருக்கும்பட்சத்தில், அதுபற்றி நாம் பொருட்படுத்தியிருக்க மாட்டோம். கழகத்தைப் பற்றித் தெளிவாகத் தெரிந்துகொள்ளாமல் கழகத்தைப் பழிப்பதுடன், அதன் மூலம் தமது அறியாமையையும் வெளிப்படுத்திக்கொள்வதைத் துணைத் தலைமை அமைச்சர்—நிதி அமைச்சர் என்ற பொறுப்பான பதவியிலுள்ள ஒருவர் சொல்கின்றாரே என்பதனால்தான், நாம், தேசாய் அவர்களின் கருத்தை மறுக்க முனைந்தோம்.

—இரா. செ.

மக்கள் குறை நீக்கும் அதிகாரி

குசராத் அரசு நியமிக்கும்

இராஜ்கோட், ஏப். 18—

மக்களின் மனக்குறையைக் கேட்டு, அதைச் சரியான முறையில் வேகமாகத் தீர்த்துவைப்பதற்காகக் குசராத் அரசாங்கம் ஓர் ஆணையரை நியமிக்கக் கூடும்.

"ஓர் அதிகாரி, மக்களின் குறைகளைக் கேட்டுச் சம்பந்தப்பட்ட அரசாங்கத் துறைகளுடன் தொடர்புகொண்டு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்பது இதன் நோக்கமாகும். இத்திட்டத்தை மாநில அரசு ஆராய்ந்துவருவதாகத் தெரிகிறது.

குசராத் அமைச்சரவையில் பொது உறவிற்குப் பொறுப்பான ஓர் அமைச்சர் இருக்கிறார்; அவர், மக்களின் குறைகளை மேல்மட்டத்தில் ஆராய்வார்.

மக்களின் குறைகளைக் கூடியமட்டிலும் அந்தந்த இடங்களில் நேரிடையாகக் கேட்டுத் தீர்த்து வைப்பதற்காகப் பல்வேறு அமைச்சர்களுக்குக் குறிப்பிட்ட மாவட்டங்களை ஒதுக்கி விடுவதும் ஆராயப்படுகிறது. (நேபன்)

தவறான போக்குக்கு எதிரான அறைகூவல்

"செல்வாக்கை இழந்துவிட்ட நிலையில், சோகத்தின் எல்லைகளில் காங்கிரசுக்கட்சி நடைபோடுகிறது!

ஆச்சாரியா கிருபளானி ஒருமுறை, நாடாளுமன்றத்தில் காங்கிரசுக் ஆட்சியைப் பற்றிப் பேசுகையில்,

"நான் அவர்களைக் கடுமையாக விமர்சிக்கமாட்டேன்; நான் அவர்களுக்காக இரக்கப்படுகிறேன்"

என்று கூறிய வாசகங்கள் இன்று நம் நினைவிற்கு வருகின்றன!

"உணர்ச்சி வசப்பட்டு மக்கள், அவசரமான முடிவெடுத்துவிட்டார்கள்" என்று கூறவும் காங்கிரசாருக்கு வழியில்லை! காங்கிரசின் பெருந்தலைவர்களே அதன் தவறுகளைச் சுட்டிக்காட்டுகின்றனர்.

காங்கிரசுத் தலைவர் காமராசர், தேர்தலுக்கும் பிறகு கட்சியின் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டிவிட்டு, கட்சியைப் பலப்படுத்த வேண்டும்' என்று கூறுகிறார்.

இந்திரா, தலைமையமைச்சர் தேர்தலிலிருந்து குடியரசுத் தலைவர் தேர்தல்வரை கட்சிக்குள் தனது நோக்கத்தைப் பிடிவாதத்தோடு நிறைவேற்றி வருகிறார்.

அண்மையில் டில்லிக்கு வந்தபோது இராஜாஜி, 'வெற்றியைப்போல எதுவும் வெற்றி பெறுவதில்லை; தோல்வியைப் போல எதுவும் தோல்வியடைவதில்லை'என்று நிருபர்களிடம் கூறினார்.

டில்லி காங்கிரசு வட்டாரத்தில் இதே நிலையே நிலவுகிறது.

டில்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாடு பற்றிக் குறிப்பிட்ட அண்ணாதுரை 'செயல்களுக்கான முன்னுரை வரைதிக்கப்பட்டிருக்கிறது' எனத் தெரிவித்திருக்கிறார்.

ஆனால் முதலமைச்சர் மாநாட்டு முடிவுகள் காங்கிரசில் உட்பூசல் வளரும் நேரத்தில் டில்லியில் நடைபெற்ற அம்மாநாடு, இந்தியக் கூட்டாட்சி—அரசியல் சட்டம் ஆகியவற்றின் தவறான போக்குகளுக்கு எதிரான அறைகூவலாக அமைந்ததை யாரும் மறுக்கமுடியாது!

—[17-4-64 மெயில்' இதழில் 'ஊர்வலம்' என்ற பகுதியில் போர்டிஞைஸ் எழுதியிருப்பது]

மீண்டும் தப்புக் கணக்குப் போடுகிறது பாகிஸ்தான்

இனி இந்தியாவுடன் போர் மூண்டால் வெற்றி பெற்றுவிடுவராம்

விமானப் படையை வலுப்படுத்தும் முயற்சியில் தீவிரமாகிறது

புதுடில்லி, ஏப். 18—

1965-ல் ஏற்பட்ட இந்தியா—பாகிஸ்தான் எல்லைப் போரில் பலவீனமடைந்த பாகிஸ்தான், விமானப் படையைப் பலப்படுத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது.

போதுமான அளவிற்கு அமெரிக்கப் போர் விமானங்களைப் பெறுவதற்கான முயற்சி நடைபெறுகிறது.

ஈரானிலும், ஜோர்டானிலும் அமெரிக்கப் போர் விமானங்கள் பயன்படுத்தப்படுகின்றன; பாகிஸ்தான் போர்வீரர்கள் அந்நாடுகளுக்குச் சென்று பயிற்சி பெறுவர்.

அண்மையில் ஈரான், அமெரிக்காவிடமிருந்து பெற்ற F-5 போர் விமானங்களில் தற்போது பாகிஸ்தான் வீரர்கள் பயிற்சி பெறுவதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்காவில் உருவாக்கப்பட்ட F-86 சாபர் ஜெட் விமானங்களை மேற்கு ஜெர்மனியிலிருந்து பெற்ற ஈரான், அவைகளைப் பழுதுபார்ப்பதற்காகப் பாகிஸ்தானுக்கு அனுப்பியபோது, இந்தியா அச்செயலைக் கண்டித்தது; ஆனால் இன்னும் அவ்விமானங்கள் பாகிஸ்தானிலேயே இருக்கின்றன.

மூன்று வாரங்கள் நடைபெற்ற இந்தியா – பாகிஸ்தான் எல்லைப் போரில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பாகிஸ்தான், தனது படைபலத்தைப் பெருக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது.

மேற்கு பாகிஸ்தானில் 5 புதிய படைப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன.

'பாட்டன் டாங்கிகளின் கல்லறை' என்றழைக்கப்படும் 'கெம்கரன்' பகுதி, பலப்படுத்தப்பட்டு இருக்கிறது.

இனிமேல், இந்தியா – பாகிஸ்தான் எல்லைப்போர் ஏற்பட்டால், அப்போரில் பாகிஸ்தான் வெற்றி பெற்றுவிடுமென்று பாகிஸ்தானியர்கள் நம்புகிறார்களாம்.

வாக்குறுதியைக் காப்பாற்றுமா அமெரிக்கா

மூன்றாவது நாட்டிலிருந்து பாகிஸ்தானுக்கு ஆயுத உதவி

இந்தியாவின் கோரிக்கையை ஏற்று அமெரிக்கா, பாகிஸ்தானுக்கு ஆயுத உதவி செய்யாதென்று அறிவிக்கப்பட்டது. ஆனால் அதற்குப் பிறகும் அமெரிக்காவிடமிருந்து போர் விமான உறுப்புக்களைப் பாகிஸ்தான் பெற்றிருக்கிறது.

ஈரான் போன்ற நாடுகளில் இருக்கும் அமெரிக்க ஆயுதங்களை பாகிஸ்தான் பெற்று...

இந்திய வெளி விவகாரச் செயலாளர் சி. எஸ். ஜா, 'இச்செயல்கள், அமெரிக்கா இன்னும் தனது பழைய கொள்கையையே பின்பற்றுவதை விளக்குகின்றன' என்றார்,

அமெரிக்க ஆயுதங்களை மூன்றுவது நாட்டிடமிருந்து பாகிஸ்தான் பெறுவதையும் தடுப்பதன் மூலமே அமெரிக்கா தனது வாக்குறுதியைக் காப்பாற்ற முடியுமென்று அவர் கூறினார்; இதுபற்றி அமெரிக்க அரசிற்கு அறிவிக்கப்பட்டிருக்கிறதென்றும் அவர் கூறினார்.

டெலிவிஷன் திட்டம்

தலைமையமைச்சர் நிராகரிப்பு

அடுத்த ஆண்டு வாக்கில் ஏற்படுத்தவிருந்த டெலிவிஷன் திட்டத்தை, இலங்கை கைவிட்டது.

"அத்துறையில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியமில்லை" என்று தலைமையமைச்சர் டட்லி சேனநாயகா உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பு நகரின் 10 மைல் சுற்று வட்டாரத்துக்குள் தொலைக்காட்சி... ரூ. 80 இலட்சத்தில் டெலிவிஷனை ஏற்படுத்துவது என்று திட்டமிடப்பட்டது. இதற்கு மேற்கு ஜெர்மனி ரூ. 50 இலட்சம் உதவி அளிப்பதாக இருந்தது.

இலங்கை ஒலிபரப்புக் கார்ப்பரேஷன் இத் திட்டத்தைப் பரிசீலித்தபோது இலங்கை தன் பங்காக மேலும் ரூ 30 இலட்சம் செலவிட வேண்டியிருக்கும் என்று கண்டறிந்தது.

தலைமையமைச்சரிடம் இத் திட்டம் தாக்கல் செய்யப்பட்டது; அவர், அத் திட்டத்தை நிராகரித்துவிட்டார். (ஏ. ஏ. என். எஸ்.)

வரலாறு மாறுது— மிரட்டுவதால் பலனில்லை!

"நாட்டின் உண்மையான நிலைமையைக் காங்கிரசார் உணர வேண்டும். 1957-ல் 15 இடங்கள் பெற்றபோது, 'அடுத்த முறை கழகம் அடியோடு போய்விடும்' என்றார்கள்; ஆனால் 15 இடம் 50 ஆக உயர்ந்தது! '50 பேர் வந்தது பிரமாதமா? அடுத்த தேர்தலைப் பாருங்கள்' என்றார்கள்; ஆனால், 138 இடங்களை நாம் பெற்றுள்ளோம்! இப்போதாவது அரசியல் தெளிவு பெற்றார்களா—இல்லை! மூலை முடுக்குகளில் நின்றுகொண்டு, 'எத்தனை நாளைக்கு இந்த ஆட்சி?' என்று பேசும் பழைய பாணிதான் இருக்கிறது!

"தி.மு. கழக ஆட்சி எத்தனை நாள் இருந்தால்தான் என்ன? இந்த வரலாறு மாறவா போகிறது? 'அமைச்சரவைக்கு சங்கடங்களைக் கொடுத்து எதிர்ப்புகளை ஊட்டி விரட்டிவிடுவோம்' என்று மிரட்டுகிறார்கள்!

"இடையிலே திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை போய்விடாது; அப்படிப் போவதாக இருந்தால், நான் இந்தப் பதவியை ஏற்றுக்கொண்டிருக்க மாட்டேன்! அப்படியே போவதாகவே வைத்துக்கொள்ளுங்கள்—அதனால் எங்களுக்கு என்ன நட்டம்?

"ஒரே இடத்தில் காங்கிரசு தோற்று இருந்தால்—வேண்டுமானால்—மாற்றுக் கட்சி ஆட்சியை அவர்களால் கவிழ்த்துவிட முடியும்; ஆனால், பல மாநிலங்களில் அல்லவா தோற்றிருக்கிறது?

"காங்கிரசல்லாத ஆட்சிக்கு ஏதாவது தொல்லை கொடுக்க வேண்டுமென்று முயற்சி செய்தால், காங்கிரசு ஆளக்கூடிய மாநிலங்களில் காங்கிரசல்லாத கட்சிகள் சும்மாவா இருக்கும்? அந்த அளவுக்கு எங்களுக்குள் தொடர்பு இல்லாமலா இருக்கும்?"

—முதலமைச்சர் அண்ணா

(மதுரைச் சிறப்புக் கூட்டத்தில்)

உலகிலேயே சிறந்த திறந்தவெளிச் சிறைச்சாலை!

"உலகிலேயே மிகச் சிறந்த திறந்தவெளிச் சிறைச்சாலையைக் கொண்ட நாடு" என்று, இலங்கையை, ஐ.நா. அமைப்பு தேர்ந்தெடுத்துள்ளது.

அத்துடன், 'சிறைச்சாலையில் சிறந்த பயிற்சி முறைகளைக் கொண்ட நாடு' என்றும் இலங்கை, பாராட்டைப் பெற்றுள்ளது.

"மற்ற நாடுகளிலுள்ள சிறை அதிகாரிகள் பயனடையவேண்டும் என்பதற்காக இலங்கையில் வாலேகெல்லேயில் உள்ள திறந்தவெளி சிறைச்சாலை பற்றி டெலிவிஷன் படம் எடுக்கப்படும்" என்று இலங்கையின் சிறைச்சாலை கமிஷனருக்கு ஐ. நா. அலுவலகம் தெரிவித்துள்ளது.

அப்படத்தை எடுக்க ஐ. நா. படக் குழு ஒன்று விரைவில் இலங்கைக்கு வந்து சேரும்.

மக்கட் பிரதிநிதிகளுக்கு அதிகாரிகள் மதிப்பளிக்க வேண்டும்

மத்திய உள்துறை அமைச்சின் 'புதிய ஞானோதயம்'!

புதுடில்லி ஏப் 18—

சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், அரசாங்க அதிகாரிகளுக்கும் நேசத் தொடர்பு ஏற்படுத்தும் வகையில் மத்திய உள்துறை அமைச்சகம் குறிப்பு ஒன்றினைத் தயார் செய்துள்ளது; அக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:—

"அரசாங்க அதிகாரிகள் சட்டமன்ற—நாடாளுமன்ற உறுப்பினர்கட்குத் தரவேண்டிய மதிப்பைத் தரவேண்டும்; என்றாலும், அதிகாரிகள் சுதந்தரமாகச் செயல்பட வேண்டும்.

"அதிகாரிகள் ஒருநாளில் மூன்று மணி நேரமாவது பொதுமக்களோடு தொடர்பு கொள்ள வேண்டும்; நிதியைக் காப்பதற்காகச் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பும் கோரிக்கையை அதிகாரிகள் பொறுப்போடு பரிசீலிக்க வேண்டும்.

"அதேநேரத்தில், சட்டமன்ற—நாடாளுமன்ற உறுப்பினர்கள் சட்டத்தை மீறிச் செயல்பட்டு, தவறான நோக்கங்களுக்கு அதிகாரிகளின் உதவியைப் பெற முயலக் கூடாது."

காலமாற்றத்தில் உறுதிமொழிக்கு மதிப்பில்லை

அரசியல் சட்டத் திருத்தமே இந்தி பேசாதவர்களுக்குப் பாதுகாப்பளிக்கும்

18—4 67 'இந்து' இதழில், 'ஆசிரியருக்குக் கடிதம்' என்ற பகுதியில், சென்னையைச் சேர்ந்த என். சுப்பிரமணியம் என்பவர் எழுதியிருப்பதாவது:—

"ஏப்ரல் 14-ம் நாள் 'இந்து' இதழின் தலையங்கத்தில், 'இந்தி மொழி ஆங்கிலத்தால் அகற்றப்பட வேண்டும்' என்பதை நீங்களும் ஒப்புக்கொண்டிருக்கிறீர்கள்; இவ்வெண்ணத்தைச் செயல்படுத்த அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும்

இந்தி பேசாத மக்களே இந்தியாவின் பெரும் பகுதிகளில் வாழ்கின்றனர்! அவர்கள், ஆங்கிலத்தால் இந்தி அகற்றப்படுவதை வரவேற்கின்றனர். அரசியல் சட்டத்தைத் திருத்துவதன் மூலமே இவ் விழைவினை நிறைவேற்ற முடியும்.

நேருவின் உறுதிமொழி பற்றிப் பேசுவது பொருத்தமல்ல. காஷ்மீர் பற்றிய நேருவின் உறுதிமொழி என்னவாயிற்று? காலம் மாறிக் கொண்டுவரும்போது உரிமைக்கு அதிகம் பாதுகாப்பு தேவைப்படுகிறது.

அடிக்கடி மாற்றத்திற்கு உள்ளாக்கப்படும் சிறு திருத்தங்களால், உரிமைகளைக் காப்பாற்றமுடியாது.

இவைகளை முறைப்படி ஆராய்ந்துபார்த்தால், 'மொழிச் சிக்கலுக்குத் தீர்வுகாணும் வகையில் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும்' என்ற தமிழக முதலமைச்சரின் வாதத்தை நம்மால் எளிதில் புரிந்து கொள்ள முடியும்."

வெறியூட்டும் கள்ளும் சுவையூட்டும் பாலும்!

கழகத்தின் அடக்க உணர்வு— அறிஞர் அண்ணா விளக்கம்

"நாம் வெற்றி பெற்று ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கும் அளவுக்கு இல்லாமல் எதிர்க் கட்சியாக இருக்கும் அளவுக்கு இருந்திருந்தால், இன்று ஊர் ஊருக்கு வெற்றி விழாக் கூட்டங்கள் பெரும் அளவு நடந்திருக்கும்; ஆனால், அதிகமான அளவு வெற்றி பெற்று உடனே பொறுப்பை ஏற்க வேண்டி ஏற்பட்டதால்—புதிய வேலையில் ஈடுபட வேண்டியிருந்ததால்—வழக்கமாக நடத்த வேண்டிய வெற்றி விழாக்களை நடத்த நேரம் கிடைக்கவில்லை; நினைப்பும் எழவில்லை; தேவையும் ஏழாமற் போய்விட்டது!

"இந்நேரத்தில் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். நாம் பெற்றிருக்கக்கூடிய 138 இடங்களைக் காங்கிரசு பெற்று அவர்கள் பெற்ற 49 இடங்களை நாம் பெற்றிருந்தால் 49 பேரில் 9 பேராவது கடுமையான வினவுகளுக்கு ஆளாகி... தொடர்ந்திருப்பார்கள்! பல்வேறு தகராறுகளைத் தூண்டிவிடவும் காங்கிரசு முனைந்திருக்கும்! ஆனால், 138 இடங்களில் வெற்றிபெற்று ஆட்சிப் பொறுப்பை அடைந்தபோதிலும், நம்மிடம் உள்ள பொறுப்புணர்ச்சி காரணமாக நாம் பெற்ற வெற்றியை வெறியாக மாற்றாமல் பாதுகாத்துக்கொண்டிருக்கிறோம்!

"வெற்றி—பாலைப் போன்றது! வெறி—கள்ளைப் போன்றது! பாலும் வெள்ளையாகத்தான் இருக்கிறது—கள்ளும் வெள்ளையாகத்தான் இருக்கிறது! ஆனால், இரண்டையும் பாத்திரங்களில் போட்டால், கள்—பொங்கி வழிகிறது! பால்—பாத்திரத்தில் அப்படியே இருந்து சுவையையும் தருகிறது! வெற்றியை நாம், அமைதியான முறையில் அனுபவித்து வருகிறோம்!

"வெற்றி பெற்றாலும்கூட, நாம் காட்டுகின்ற அடக்க உணர்ச்சியைக் கண்டு அனைத்திந்திய அரசியல்வாதிகள் ஆச்சரியப்படுகிறார்கள்; 'இவ்வளவு பொறுப்புடன் இருப்பவர்களுடைய ஆட்சியிலும் பொறுப்பு இருக்கும்' என்று நம்பிக்கை கொள்கிறார்கள்!

"நாம் அடைந்துள்ள வெற்றியில் பாதி வெற்றியாவது காங்கிரசுக்குக் கிடைத்திருந்தால், நாம் வீட்டில் தாள் போட்டுத் தூங்கிக் கொண்டிருந்தாலும் கதவைத் தட்டி வெளியே இழுத்துக் கொண்டுவந்து, 'யாருடைய ஆட்சி நடக்கிறது தெரியுமா? நாளை காலைக்குள் மதுரையிலிருந்து மன்னார்குடிக்கும் போய்விட்டால்தான் பிழைப்பாய்' என்று சொல்லி, மீசை உள்ளவர்கள் மீசையை முறுக்கி இருப்பார்கள்! இல்லாதவர்கள், மீசை இருக்கும் இடத்தைத் தடவிக் காட்டி இருப்பார்கள்!"

—மதுரைச் சிறப்புக் கூட்டத்தில்

ஒரே குரலில் மாநில முதல்வர்கள்!

உணவு—நிதித் துறைகளில் மத்திய அரசின் பொறுப்பு என்ன?

"பல மாநிலங்களில் காங்கிரசல்லாத அரசுகள் அமைந்திருப்பது போற்றுதற்குரிய செயலாகும். ஒரு கட்சி ஆட்சியால் இந்தியாவின் திட்டப் பார்வையிலும், அவைகளைச் செயல்படுத்தும் முறையிலும் ஒரு முரட்டுத்தனம் ஏற்பட்டிருந்தது!

நேருவின் காலத்தில் அமைச்சுத் துறைகளின் குறுகிய அறைக்குள் திட்டங்கள் உருவாக்கப்பட்டன; ஆனால் டில்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில், பல தேசியப் பிரச்சினைகளும் தெளிவான பார்வையோடு ஆராயப்பட்டன!

முதலமைச்சர்கள் மாநாட்டில், மத்திய—மாநில அரசுகளிடையே கடுமையான மோதல் ஏற்படுமென்று எதிர்பார்த்தோர் ஏமாந்தனர்! காங்கிரசல்லாத மாநில முதலமைச்சர்களும், காங்கிரசு மாநில முதலமைச்சர்களும் ஒரே கோணத்தில் வாதிட்டனர்! ஒரே குரலில் அவர்கள், 'மாநிலங்களுக்கு உரிமை வேண்டும்' எனக் கூறினர்! 'உணவுச் சிக்கல், நிதியுதவி இவைகளில் மத்திய அரசு பொறுப்போடு மாநிலங்களுக்கு உதவ வேண்டும்' என அவர்கள் கேட்டுக்கொண்டனர்!

உணவுச் சிக்கலில் மண்டல அமைப்புகள் விரும்பப்படவில்லை. கொள்முதல் பற்றி விவாதிக்கப்பட்டது. உபரி மாநிலங்களும், பற்றுக்குறை மாநிலங்களும் ஒத்துழைப்பு மனப்பான்மையோடு நடந்துகொண்டன!

நிதிப் பற்றுக்குறை மாநிலங்களுக்கு ஏற்படாமல் மத்திய அரசு உதவ வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது!"

—18—4—67 'இந்து' இதழில் கே. ரங்கசாமி எழுதியுள்ள கட்டுரையின் ஒரு பகுதி.

மத்திய அரசின் நிர்ப்பந்தத்தை மாநில அரசு எதிர்க்கும்

அரிசியின் விலையை உயர்த்த கேரளம் இணங்காது!

அரிசியின் தற்போதைய விலை மட்டம் மீறிவிடாமலிருக்க டில்லியிடமிருந்து உதவித் தொகை வராமல், கேரளத்தில் அரிசி விலையை உயர்த்த வேண்டுமென்று மத்திய அரசு கொண்டுவரும் நிர்ப்பந்தத்தை இம்மாநில அரசு எதிர்த்து நிற்குமென்பது, இப்போதைய நிலவரங்களிலிருந்து தெரிகிறது.

அரிசி விலை உயராமல் பார்த்துக்கொள்வதற்கு மாநில அரசு தனது ஆற்றல் அனைத்தையும் பயன்படுத்தும்" என்று உயர் அதிகாரி ஒருவர் கூறினார்; அரிசி விலையை உயர்த்த முயன்றால், அது ஏழு கட்சிகளடங்கிய அரசாங்கத்திற்கு அரசியல் தொல்லையை உண்டாக்கிவிடும்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்நேரத்தில் விலையை உயர்த்துவது அரசியல் காரணங்களினாலும், ஆட்சிக்குத் தற்கொலையாக முடியும்; எனவே, உணவிற்கு உதவித் தொகை வழங்குவதற்காக, மாநில அரசு பிற வழிகளில் பணம் திரட்டவேண்டும். இதில் ஒரு முக்கியமான நடவடிக்கை மதுவிலக்கை ஒழிப்பதாகும்.

இன்னும் ஒரு மாதத்திற்குள் மதுவிலக்குச் சட்டங்களை ஒழித்துக் கட்ட ஆயத்தங்கள் நடந்துவருவதாக அரசாங்க வட்டாரங்கள் கூறுகின்றன. இதனால் சுமார் ரூ. 8 கோடி முதல் ரூ. 9 கோடி வரை வருவாய் கிடைக்கும்.

பி. எல். 480 திட்டத்தின்கீழ் பெறப்படும் அமெரிக்க உணவு உதவியை நச்பூதிரிபாடு எதிர்த்திருப்பதானது, 'அடையாளக் கண்டனம்' என்று கருதப்படுகிறது; இதை விளக்கி மாநில அமைச்சரொருவர் சொன்னதாவது:—

"அமெரிக்காவிடமிருந்து தர்மம் பெறுவதை எதிர்ப்பது எங்களது கொள்கையாகும்; அதே நேரத்தில் இம்மாநிலத்தின் பெருநலன்கள் பாதிக்கப்படாமலும் பார்க்க வேண்டியிருக்கிறது"

"கேரளம், 'பஞ்சாப் கோதுமை வேண்டுமா—அமெரிக்க உணவு வேண்டுமா' என்று இரண்டிலொன்றைத் தேர்ந்தெடுக்க முடியாது" என்று மற்றொரு அதிகாரி கூறினார்; 'இது, எதைத் தேர்ந்தெடுப்பது என்ற விஷயமன்று; நாங்கள் புதுடில்லியிலிருந்து கோதுமை பெறக்கூடிய ... மான நிலையில் இருக்கிறோம்' என்று அவர் சொன்னார்.

எனவே, அமெரிக்க உணவு உதவியைப் பற்றிப் புதுடில்லிக்கும்—கேரளத்திற்குமிடையே மோதல் ஏற்படாது என்றே தோன்றுகிறது.

அத்துடன் கேரளம் எல்லாத் துறைகளிலும் மத்திய அரசை எதிர்த்து நிற்க விரும்பவில்லையென்று தாராளமாகக் கூறலாம்.

சாலைப் போக்குவரத்து தொழிலாளர் ஊதிய நிர்ணயம்

சாலைப் போக்குவரத்துத் துறையில் ஐந்து தொழிலாளர்களோ அதற்கும் மேற்பட்ட தொழிலாளர்களோ பணியாற்றும் நிறுவனங்களைத் தொழிலாளர்களுக்கு இடைக்கால உதவி வழங்குவது பற்றி மத்திய அரசாங்கம் அமைத்துள்ள சாலைப் போக்குவரத்துத் துறைக்கான மத்திய ஊதிய போர்டு ஆலோசித்து வருகிறது.

நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில இடங்களில் சம்பந்தப்பட்டவர்களின் கருத்துக்களை கேட்டறிவதென்று மத்திய ஊதிய போர்டு தீர்மானித்திருக்கிறது.

வானொலி

22—4—67 சனி

சென்னை-1

416.7 மீ. (720 கி.சை.)

காலை

6-00 மங்கள இசை
6-05 துதிப்பாடல்கள்
6-30 நிகழ்ச்சிக் குறிப்புகள்
6-35 அருள் வாக்கு
6-40 விவசாயிகள்
6-45 இசை அமுதம்
7-15 தமிழில் செய்தி
7-30 பாட்டு
8-00 வயலின்
9-00 மெல்லிசை
9-15 பாட்டு
9-45 பாட்டு
10-15 இசை மலர்
10-30 மதுரகீதம்
10-55 ஆங்கிலத்தில் செய்தி
11-55 வட்டாரச் செய்திகள்
12-00 பாட்டு
12-30 பாடல்கள்
1-00 பாட்டு
1-30 வாத்தியக் குழு
1-45 திரை இசை
1-55 வானிலை அறிவிப்புகள்
2-00 தமிழில் செய்தி
2-10 புல்லாங்குழல்
2-40 பாட்டு
3-10 பாட்டு
3-30 சிறுவர் நாடகம்
5-00 புல்லாங்குழல்
5-30 தொழிலாளர்களுக்கு
6-00 இடைவேளை
6-05 வட்டாரச் செய்திகள்
6-15 திரை இசை
6-45 பாட்டு
7-15 தமிழில் செய்தி
7-30 திருச்சி அஞ்சல்
8-00 நாடகம்
9-00 ஆங்கிலத்தில் செய்தி
9-15 சமஸ்கிருத நிகழ்ச்சி
9-30 டெல்லி அஞ்சல்
11-00 வாத்தியக் குழு
11-30 நாமாவளி

சென்னை-2

211.3 மீ. (1,420 கி.சை.)

காலை

6-00 சென்னை 1-ல் உள்ளபடி
6-40 ஆங்கிலத்தில் செய்தி
6-45 சென்னை 1-ல் உள்ளபடி
7-00 தெலுங்கில் செய்தி
7-15 இசை மலர்
7-30 சென்னை 1-ல் உள்ளபடி
8-00 ஆங்கிலத்தில் செய்தி
11-55 சென்னை 1-ல் உள்ளபடி
1-00 ஆங்கில நிகழ்ச்சி
1-30 ஆங்கிலத்தில் செய்தி
1-40 இந்தியில் செய்தி
1-50 தெலுங்கில் செய்தி

மாலை

5-30 நேயர் விருப்பம்—
6-00 ஆங்கிலத்தில் செய்தி
6-05 சென்னை 1-ல் உள்ளபடி
6-15 இடைவேளை
6-20 வானிலை அறிவிப்பு
7-00 தெலுங்கில் செய்தி
7-15 திரை இசை
7-30 கீத் மாலிகா
8-00 ஆங்கிலத்தில் பேச்சு
8-15 மெல்லிசை மெட்டுகள்
8-30 வானொலிச் செய்திச் சுருள்
8-45 வாத்திய இசை
9-00 ஆங்கிலத்தில் செய்தி
9-15 செய்திச் சுருள்
9-20 இடைவேளை
9-30 நேயர் விருப்பம்
11-00 ஆங்கிலத்தில் செய்தி

திருச்சி

319.1 மீ. (940 கி.சை.)

காலை

6-30 மங்கள இசை
6-40 ஆங்கிலத்தில் செய்தி
6-45 ஆங்கிலத்தில் அறிவிப்பு
6-50 பக்திப் பாடல்
6-55 அறவுரை
7-00 துதிப்பாடல்கள்
7-10 விவசாயிகள்
7-15 தமிழில் செய்தி
7-30 வயலின்
8-00 ஆங்கிலத்தில் செய்தி
8-15 திரை இசை
வட்டாரச் செய்திகள்
வயலின்
கதம்பம்
பிள்ளைக்கனி அமுது
வாத்திய இசை
ஆங்கிலத்தில் செய்தி
இந்தியில் செய்தி
இசை மஞ்சரி
தமிழில் செய்தி

மாலை

திரை இசை
தொழிலாளர்களுக்கு
அறிவிப்புகள்
வட்டாரச் செய்திகள்
இடைவேளை
இசை மஞ்சரி
ஊர்ச்சாவடி
வாத்திய இசை
கலைக்கூடம்
திரை இசை
தமிழில் செய்திகள்
விவசாயிகட்கு
பாரதிதாசன் பற்றி பேச்சு
டெல்லி அஞ்சல்
வாத்தியக் குழு
ஆங்கிலத்தில் செய்தி
ஆங்கில உரை நிகழ்ச்சி
இடைவேளை
டெல்லி அஞ்சல்
ஆங்கிலத்தில் செய்தி

பணக்காரர்கட்குச் சலுகை வழங்கியது பழைய ஆட்சி

பல கோடி ரூபாய் வரியை வசூலிக்காதிருந்ததேன்?

சென்னைக் கூட்டத்தில் ஆற்காடு வீராசாமி கண்டனம்

"தமிழகத்தை ஆண்ட காங்கிரசு அரசினர் வசூலிக்காது சென்ற விற்பனை வரிப் பாக்கி மட்டும் ரூ. 5,38,13,000 ஆகும். அந்த வரி, ஏழை எளிய மக்களிடம் வசூலிக்கப்பட வேண்டியதாக இருந்திருந்தால், விரட்டிப் பிடித்து வாங்கியிருப்பார்கள்! ஆனால், இந்த விற்பனை வரிப் பாக்கி, பணம் படைத்த முதலாளிகளிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டியதாகும்! எனவே அந்த அரசினர் வசூலிக்காது விட்டுவிட்டனர்"

என்று, ஆற்காடு தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் தோழர் வீராசாமி பேசுகையில், பழைய காங்கிரசு ஆட்சிமீது குற்றஞ் சாட்டினர்.

13—4—67 அன்று சென்னை 88-வது வட்டம் பெரியார் சாலையில் நடந்த கலைஞர் மு. கருணாநிதி மன்றத் திறப்பு விழாவில் தோழர் வீராசாமி பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:—

ஒப்புதல் ஏதுமின்றிப் பணத்தைச் செலவிட்டனர்

"தமிழகத்தை இந்தக் காங்கிரசார் ஆண்டபோது, கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் ரூ. 11,44,000-ஐ எந்தவித அங்கீகாரமும் இன்றிச் செலவழித்திருக்கிறார்கள்; என்ன திட்டத்தை நிறைவேற்றியிருக்கின்றார்கள் என்பதை ஆய்வு செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இப்படி ஆண்டவர்கள்தாம், நாம் ஆட்சிக்கு வந்ததும் கேலிப் பேச்சில் ஈடுபட்டுள்ளார்கள்.

3 ரூபாய்க்கு ஒரு படி போடாதவர்கள் இவர்கள்!

'ரூபாய்க்கு 3 படி எங்கே?' என்று கேட்கிறார்கள் 3 ரூபாய்க்கு ஒரு படி போடமுடியாதவர்கள்தான், இப்போது நம்மைப் பார்த்து இப்படிக் கேட்கின்றார்கள்.

அரிசியே கிடைக்காத நிலையை மாற்றி, அரிசி கிடைக்கும் நிலையை உருவாக்கியிருக்கின்றோம்; பிறகு, ரூபாய்க்கு ஒரு படி அரிசி எங்கும் கிடைக்கவும், அதன் பிறகு படிப்படியாக ரூபாய்க்கு மூன்றுபடி கொடுக்கவுமான முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றோம்.

நமது சாதனை இது!

இப்போது அமைச்சர்களின் ஊதியத்தைக் குறைத்துள்ளோம்: வாகன வசதிகளைக் குறைத்திருக்கின்றோம்; வீட்டு வசதிகளைக் குறைத்திருக்கின்றோம்.

பழைய அரசினர், ரிசர்வ் பாங்கியில் மற்றுவைத்துச் சென்றார்கள்; அந்தக் கடனை நாம் அடைத்துள்ளோம்.

அரிசிக் கிடங்குகளில் இருப்பு இல்லாது இருந்தது; இப்போது, கொள்முதல் செய்வதில் தக்க நடவடிக்கை எடுத்து, அரசினர் கிடங்குகளில் இருப்பு வைத்துள்ளோம். கிட்டத்தட்ட 3 இலட்சம் டன் அரிசி அரசினர் கிடங்குகளில் இப்போது இருப்பு உள்ளது.

பழி வாங்குகிறோமா நாம்?

காங்கிரசார் காலத்தில் அதிகாரிகள் பழிவாங்கப்பட்டார்கள்; தி. மு. க. ஆட்சிக்கு வந்ததும், எந்த அதிகாரியும் பழிவாங்கப்படவில்லை; எந்த அதிகாரி மீதும் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை நாடு அறியும்!

யாரோ செய்த தவறுகளுக்கு அதிகாரிகளைப் பழிவாங்குவது நியாயமில்லை. 'எய்தவன் இருக்க அம்பை நோகக்கூடாது' என்பது எங்களுக்குத் தெரியும்.

அநியாயத்திற்கு!

காங்கிரசார் ஆட்சிக்காலத்தில், சென்னை நகரில் 8 பேருக்கு வாணிப உரிமை வழங்கப்பட்டு 'ஸ்பிரிட்' விற்கப்படுகிறது' அந்த உரிமை பெற்றவர்கள் அனைவரும் முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலத்துக்குச் சொந்தக்காரர்கள்— வேண்டியவர்களாகவே உள்ளனர்.

விளக்கு எரிப்பதற்கும் மெருகு (பாலிஷ்) போடுவதற்கும் 1,50,000 லிட்டர் விற்பனை செய்வதற்கு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. 'ஸ்பிரிட்'டின் உண்மையான விலை ஒரு லிட்டர் 87 காசுதான்; ஆனால், லிட்டர் ரூ. 3-50-க்கு விற்கப்படுகிறது; குடிக்காகப் பயன்படுத்தப்படுகிறது. ஒருநாளைக்கு அந்த 8 பேர் மட்டும் ரூ. 3 இலட்சம் இலாபம் ஈட்டுகின்றனர். அவர்கள் அத்தனை பேரும் காங்கிரசுக்காரர்களே! இது தொடர்பாக எப்படி நடவடிக்கை எடுப்பது என்பது பற்றி அரசு ஆராய்ந்து வருகிறது. தகுந்த காரியங்களுக்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது.

தொல்லைகள் கொடுக்க முனைந்து விட்டனர்!

காங்கிரசுக் கட்சியினர் நம்மைக் காரணம் இன்றித் தாக்கிப் பேசுகின்றனர். அவர்களைச் சார்ந்த சிலர் அரசாங்கத்திற்குள் இருந்துகொண்டும் தொல்லை கொடுக்கின்றார்கள்!

எடுத்துக்காட்டுக்காக ஒன்று சொல்லலாம்; சென்னை மத்திய சிறைச்சாலையில் 2 பேர், சிறைக் கொட்டகையின் முகட்டில் ஏறிக்கொண்டு, இறங்க மறுத்தனர்; அந்தச் செயலுக்கு அடிப்படைக் காரணமே இருக்கிறது.

'இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டவர்களைச் சிறையிலிருந்து விடுதலை செய்தனரே — நாங்களும் விடுதலை பெறவேண்டும் எனக் கேளுங்கள்' என்று—முன்னாள் அமைச்சரின் சொந்தக்காரரான ஒருவர் மத்திய சிறைச்சாலையில் அதிகாரியாக இருந்துகொண்டு—இப்படித் தூண்டிவிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது!

அந்தச் சிறைக் கைதிகளை, 'என்ன விவரம்?' என்று கேட்டபோது தெரிந்தது இதுதான்:— 'தி மு. க. ஆட்சியில் உணவு தரமாக உள்ளது; நல்ல உடை கிடைக்கிறது' என்று எழுதிக் கொடுத்திருக்கின்றனர்; இதைக் கண்டு ஆத்திரப்பட்ட அந்த அதிகாரி, 'மணி அடிக்கும்போது முகட்டில் ஏறிக்கொண்டு 'காமராசர் வந்தால் தான் இறங்குவேன்' என்று அங்கிருந்து கூறுங்கள்,'' என்று, வேறு சில கைதிகளைத் தூண்டிவிட்டாராம்!

அந்தக் கைதிகள் முகட்டில் ஏறும்போது, மற்ற சிறைக் கைதிகள் அவர்களை ஏறவிடாதபடி தடுத்திருக்கின்றனர்!

இப்படி, உள்ளேயும் வெளியேயும் இருக்கின்ற தொல்லைகளையும் சமாளித்துக் கொண்டு, நாம், திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய நிலையில் உள்ளோம்!

கடத்தல் அரிசியைக் கைப்பற்றியதால்....

சில நாட்களுக்கு முன்பு எங்கள் தொகுதியில் அரிசி மூட்டைகளைச் செங்கணுக்குக் கடத்திச் செல்ல ஆயத்தமாக இருந்தபோது, காவல் துறை அதிகாரி சரவணன் மூலம் நடவடிக்கை எடுத்துக் கைப்பற்றியுள்ளோம்; அந்த அரிசி என்னுடையது என்று அங்கு கூற யாரும் இல்லை! அந்த அரிசி, விலை கொடுக்கப் படாமல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது; அதன் விலை ரூ. 13,000 ஆகும்; அது நம் மக்களுக்குக் கிடைத்த லாபமாகும்.

போலி உரத்தின் மூலம் கொள்ளையடித்தனர்!

ஆற்காட்டுப் பகுதியில், 'பாரி கம்பெனி உரம்' என்று கூறி, மூட்டை ரூ. 50 ஆகவும், நெருக்கடி காலத்தில் ரூ. 85 ஆகவும் விற்கின்றனர்.

"அந்த உரத்தைப் பயன்படுத்தியதால் நிலம் வளமாக விளைவில்லை; நிலம் கெட்டு விட்டது" என்று உழவர்கள் கூறினார்கள்.

அந்த உரம் விற்கும் இடத்திற்குச் சென்று ஆய்வு செய்தோம்; அரசு உரத்தை, சென்னையில் உள்ள நுங்கம்பாக்கத்தில் தயார் செய்கின்றனராம். தூத்துக்குடியிலிருந்து உப்பு வாங்கி, உப்பிலிருந்து உரத்தைப் போன்று தயார் செய்து விற்கின்றனர் என்பது தெரிய வந்தது.

'உரம்' என்று விற்கப்பட்ட அந்தப் பொருளில், ஒரு சதவீதம் கூட உரம் இல்லை. போக்குவரத்துச் செலவு உட்பட ஒரு மூட்டை உப்பு உரம் ரூ, 17—50 ஆகியதாம். குறைந்தது ரூ. 50-க்கு விற்கப்படுகிறது. இந்தக் கலப்பட மோசடியை ஒழிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். தொடர்பானவர்கள் போலீசாரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இப்படி, ஒவ்வொரு துறையிலும் தீவிர நடவடிக்கை எடுத்து வரும் தமிழக அரசு, கொடுத்த வாக்குறுதிகளை உறுதியாக நிறைவேற்றும்!"

மத்திய பட்டு போர்டு உறுப்பினராக இரா. செழியன்

புதுடில்லி, ஏப். 19— திருத்தி அமைக்கப்பட்டுள்ள மத்திய பட்டு போர்டில், நாடாளுமன்ற தி.மு.க. உறுப்பினர் இரா. செழியனும் இடம் பெற்றிருக்கிறார்.

இந்திய அரசின் துணிக் கமிஷனரைத் தலைவராகக் கொண்ட இந்தப் போர்டில் 18 உறுப்பினர்கள் இருப்பார்கள் அவர்களில் நால்வர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆவர்.

கருநாடக மாநில அரசால் ஐவரும், மேற்கு வங்க அரசால் இருவரும் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

தமிழகம், அசாம், மத்தியப் பிரதேசம், ஆந்திரம், உத்தரப் பிரதேசம், ஜம்மு காஷ்மீர் ஆகிய அரசுகள் தலா ஓர் உறுப்பினரை நியமிக்கும்.

தீ தடுப்புத் தினத்தில் தில்லைவில்லாளன்

சிதம்பரத்தில் 14—4—67 மாலை 6-30 மணிக்கு டவுன் ஹால் மைதானத்தில் எழுத்தறிஞர் தில்லைவில்லாளன் தலைமையில் தீ தடுப்புத் தினம் நடந்தது.

தீயணைப்பும் படையின் தலைவர் பெருமாள் வரவேற்புரை நிகழ்த்தினர்.

தலைவர் தில்லைவில்லாளன் உரைக்குப்பின், தோழர்கள் உத்திராபதி, அ. கோவிந்தராசன் எம் ஏ., வழக்கறிஞர் அ. சி. வைத்திலிங்கம், வேதநாயகம் (மறைமதல்வன்), புலவர் ஆறுமுகம் பேசினர்.

படையின் தலைவர் பெருமாள் தனது படையினரின் தீ தடுப்பு முறைகளை பொதுமக்களுக்குச் செய்துகாட்டி, நன்றி கூறினர்.

குடியரசுத் தலைவர் தேர்தல்

சில முக்கிய தகவல்கள்

அடுத்த மாதம் நாடாளுமன்ற உறுப்பினர்களும், மாநில சட்டமன்றங்களின் உறுப்பினர்களும் இந்திய பேரரசின் புதிய குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுப்பார்கள்.

தேர்தல் மூலம் நிறைவு செய்யப்படும் பதவிகளில் இதுதான் நாட்டிலேயே மிக உயர்ந்த பதவி!

மே மாதம் 6-ந் தேதி தேர்தல் நடக்கும். ஒரு வாரத்திற்குப் பிறகு நாட்டின் முதல் குடிமகனாக குடியரசுத் தலைவர், 'அரசியல் சட்டத்தைப் பேணிப் பாதுகாத்துப் பராமரிக்க' உறுதிமொழி எடுத்துக் கொண்டு, நாட்டுத் தலைவருக்கான உயர்ந்த பொறுப்புக்களையும் ஏற்றுக் கொள்வார்.

நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுப்பதற்கான தகுதியுடையவராயும், 35 வயதுக்குக் குறையாத இந்தியக் குடிமகனாகவும் ஒருவர் இருந்தால் தான், குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிட முடியும்.

குடியரசுத் தலைவர், ஐந்தாண்டுக் காலம் பதவியில் இருப்பார். குடியரசுத் தலைவர், மறு தேர்வுக்காகப் போட்டியிடலாம்.

மாற்றக்கூடிய தனி நபர் வாக்குகள் மூலமாக இரகசிய வாக்குப் பதிவு முறையில் தேர்தல் நடைபெறும்.

நாடாளுமன்ற — மாநிலங்களவை உறுப்பினர்கள், மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் அடங்கிய வாக்காளர் தொகுதி, குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும்.

வாக்காளர் தொகுதியில், மாநில சட்டமன்ற மேலவைகளும், மத்திய அரசு நேரடி ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசங்களும் சேர்க்கப்படவில்லை.

இத்தேர்தலில், மாநிலங்களின் பிரதிநிதித்துவம் ஒரே சீராக இருக்க வேண்டுமென்பதற்காக அரசியல்சாசனத்தில்குறிப்பாக விதிகள் இருக்கின்றன.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு உறுப்பினருடைய ஓட்டின் மதிப்பும், மற்ற உறுப்பினர்களுடைய ஓட்டின் மதிப்புக்குச் சமமாக இருக்கச் செய்வதன் மூலம் சனநாயக இலட்சியத்தை அடைய வேண்டுமென்பது நோக்கமாகும்.

ஓட்டின் மதிப்பு மிகச் சுலபமாகக் கணக்கிடப்படுகிறது. ஒவ்வொரு மாநிலத்தின் மக்கள் தொகையும் (சென்ற மக்கள் தொகை கணிப்பு விவரப்படி) அந்தந்த மாநிலத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையால் வகுக்கப்பட்டு அதன் ஈவு ஆயிரத்திற்குத் தோராயமாக நிர்ணயிக்கப்படுகிறது. இந்த ஈவு எண், அந்த மாநில சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் அளிக்கும் வாக்கின் மதிப்பாக எடுத்துக்கொள்ளப்படுகிறது.

உதாரணமாக, உத்தரப் பிரதேச மக்கள் தொகை—சென்ற மக்கள் தொகை கணிப்பு விவரப்படி—7,37,46,401 ஆகும்; அந்த மாநிலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை 425 ஆகும்; மக்கள் தொகையை 425-ல் வகுத்தால் கிடைக்கும் ஈவு தோராயமாக 174; இது, அந்த மாநில சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் அளிக்கும் வாக்கின் மதிப்பு ஆகும்.

இம்மாதிரியே ஒவ்வொரு மாநிலத்திற்கும் மதிப்பு கணக்கிடப்படுகிறது; இது, மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டு இருக்கும்.

ஜம்மு—காஷ்மீரின் மக்கள் தொகை, குடியரசுத் தலைவர் அரசியல் சட்டக் கட்டளைப்படி 44,10,000 ஆக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இத்தொகையை அந்த மாநிலத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கையான 75-ஆல் வகுத்தால், அந்த மாநில சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் அளிக்கும் ஓட்டின் மதிப்பு 59 என்று கிடைக்கும்.

ஒவ்வொரு மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் அளிக்கும் ஓட்டின் மதிப்பு பற்றிய விவரம் வருமாறு:—

ஆந்திரப்பிரதேசம்	125
அசாம்	94
பீகார்	146
குசராத்	123
அரியானா	94
ஜம்மு—காஷ்மீர்	59
கேரளம்	127
மத்தியப் பிரதேசம்	109
தமிழ்நாடு	144
மகாராட்டிரம்	146
கருநாடகம்	109
நாகாலாந்து	8
ஒரிசா	125
பஞ்சாப்	107
இராஜஸ்தான்	110
உத்தரப்பிரதேசம்	174
மேற்கு வங்காளம்	125

நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாக்கு மதிப்பைக் கணக்கிடுவதன் மூலம் மாநிலங்களுக்கும்—மத்திய அரசுக்கும் இடையே இப்பிரச்சினையில் சமமான அடிப்படை ஒன்று ஏற்படுகிறது.

மாநில சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள மொத்த வாக்கு மதிப்பை, நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையால் வகுத்தால் இந்த அடிப்படை கிடைக்கிறது.

பதினேழு மாநிலங்களைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுடைய வாக்குகளின் மதிப்பு 4,30,851 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இதை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையான 748-ஆல் (நாடாளுமன்றம்: 520; மாநிலங்களவை 228) வகுத்தால், ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரின் ஓட்டு மதிப்பு 576 ஆகக் கிடைக்கிறது.

மதிப்பு மாறுபட்டு இருந்தாலும், குடியரசுத் தலைவர் தேர்தல் தொகுதியைச் சேர்ந்த நாடாளுமன்றம், சட்டமன்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ஒரே ஒரு ஓட்டுதான்!

சிவகங்கை சேதுராசன் புதிய நிகழ்ச்சி

சிவகங்கை சேதுராசனின் 'எதற்காக தி.மு.க. ஆட்சி?' என்ற புதிய ஒலி நாடகத்தில், லஞ்சம் — இலஞ்சம் — பதுக்கல் இம்மூன்றும் தமிழகத்தை விட்டு வெளியேறும் காட்சி, கேட்பவர் உள்ளங்களை மயிர்கூச்செறியச் செய்யும். தொடர்புகொள்க:—

சிவகங்கை சேதுராசன்,
காந்தி வீதி, சிவகங்கை.

* * *

மணிவண்ணன் — வசந்தா குழுவினரின் 'நல்லதே செய்யும் நம்மவர் ஆட்சி' என்னும் கொள்கை விளக்கக் கலை நிகழ்ச்சி நடத்த விரும்புவோர் தொடர்புகொள்க:—

மணிவண்ணன்,
3/16, கிருஷ்ணசாமி கோயில் பின்புறம்,
தேனாம்பேட்டை, சென்னை-18.

* * *

திராவிடர் மல்லைக் கழகக் குழுவினரின், 'அழைக்கின்றார் அறிஞர் அண்ணா' எனும் வெற்றி விழாக் கலை நிகழ்ச்சி நடத்த விரும்புவோர் தொடர்புகொள்க:—

இளங்கோவன்-பூங்கோதை,
திராவிடர் மல்லைக் குழு,
காவேரிநகர் அஞ்சல்,
திருச்சி மாவட்டம்.

உணவுப் பிரச்சினை தீர முழு ஒத்துழைப்புத் தாரீர்!

உற்பத்தியைப் பெருக்க இயன்றதை அரசு செய்யும்

கிராம மக்களுக்கு அமைச்சர் ஏ. கோவிந்தசாமி வேண்டுகோள்

13—4—67 இரவு 9 மணிக்கு தமிழ்நாடு வேளாண்மைத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி கண்டமானடிக்கு வந்து சேர்ந்தார்.

கண்டமானடி ஊராட்சி மன்றத் தலைவர் ச. கோவிந்தசாமி கூட்டுறவு பாங்கி தலைவர் டி. சுப்புராமன் ஆகியோர் மாலை அணிவித்தனர்.

தாரை தப்பட்டைகள் முழங்க மேளதாளத்துடன் ஊர்வலமாக அமைச்சர் அழைத்து வரப்பட்டார் வழியில் கிராம மகளிர் ஆரத்தி எடுத்து வாழ்த்தி வரவேற்றனர்

கண்டமானடியில் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள இளைஞர் விவசாய சங்கத்தை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி திறந்து வைத்தார்

பின்னர் அமைச்சர் வரவேற்று, ஊராட்சிமன்றத் தலைவர் பேசுகையில், கிராமத்தில் உள்ள குறைகளைச் சுட்டிக்காட்டி ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

தி. மு.க அமைச்சர் அவைக்கு கிராம மக்களும், ஊராட்சி மன்றமும் ஒத்துழைப்புக் கொடுப்பதாக உறுதி கூறினர்.

கண்டமானடி ஊராட்சி மன்றத்தின் சார்பாக வரவேற்பு இதழ் வாசித்து அளிக்கப்பட்டது.

பின்னர் விவசாய பாங்கியின் தலைவர் டி. சுப்புராம ரெட்டியார், பாங்கியின் சார்பில் வரவேற்பு இதழ் வாசித்தளித்தார்.

வி. அரியலூர் ஊராட்சிமன்றத்தின் சார்பிலும் வரவேற்பு இதழ் வாசித்தளிக் பட்டது.

கண்டமானடியில் பால் வழங்கும் சமூகமும் கண்டமானடி அறங்காவலர் குழுவும் வரவேற்பு இதழ் வாசித்தளித்தது.

பின்னர், கண்டமங்கலம் இராமன் எம்.எல்.ஏ., விழுப்புரம் சண்முகம் எம்.எல்.ஏ. ஆகியோர் வரவேற்றும் பேசினர்.

அமைச்சருக்கு மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

அமைச்சர் வரவேற்புக்கு நன்றி தெரிவித்தும் பேசியதாவது:—

"அறிஞர் அண்ணா அவர்கள் அமைச்சரவையில் எனக்கு நான்கு இலாகாக்களின் பொறுப்பு தரப்பட்டிருக்கிறது; அவற்றில் முக்கியமானது விவசாயத் துறை. விவசாயிகளுக்கு என்னால் இயன்ற உதவிகளைச் செய்வேன். தற்போது நான், மாவட்டவாரியாக விவசாயிகள் மாநாடு கூட்டி விவசாயிகளின் குறைகளைக் கண்டறிந்து ஆவன செய்யத் திட்டமிட்டுள்ளேன்.

கொள்முதல் திட்டத்தில் உணவுப் பிரச்சினை மிக முக்கியப் பிரச்சினை; முதலில் அதைச் சீர்திருத்தினால்தான் மற்றப் பிரச்சினைகள் சுமுகமாகத் தீரும்.

எனவே, கிராமங்களில் உள்ள நிலச் சுவான்தாரர்கள், தேவைக்கு மேல் வைத்துள்ளதை சர்க்காருக்குக் கொடுத்தால் நல்லது; அதிகாரிகளோ, நாங்களோ எங்கள் வீட்டுக்கு நெல்லை எடுத்துச் செல்லவில்லை; ஏழைமக்கள்—தொழிலாள மக்கள் வயிறார உண்ணவே இதனைச் செய்கிறோம்.

உர விநியோகப் பற்றுக்குறை உள்ளதால், அதிக உரம் தேவையென மத்திய அமைச்சர் ஜெகஜீவன்ராம் அவர்களிடம் வாதாடியுள்ளேன். உரத்தை அதிகம் வழங்குவதற்கு முயற்சி செய்வேன்.

கிராமத்தில் உள்ளவர்கள் ஒற்றுமையாக முயன்றால், தேவைகளை நிறைவு செய்து கொள்ளலாம்.

இளைஞர் விவசாய சங்கம் விவசாயத்தில் உள்ள குறைகளையும், விவசாயிகளின் தேவைகளையும் எடுத்துச் சொல்லி, அத்துறையில் அரசினரின் ஒத்துழைப்பைப் பெறப் பாடுபடுமாறு கேட்டுக்கொள்கிறேன்."

சிங்காநல்லூருக்கு பவானி ஆற்றிலிருந்து குடிநீர்

திட்டத்தை வற்புறுத்தி அமைச்சரிடம் மனு

சிங்காநல்லூர், ஏப். 17—

"சிங்காநல்லூர் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக பவானி ஆற்றிலிருந்து தண்ணீரைக் கொண்டுவர வேண்டும்"

என்று தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் முத்துசாமி அவர்களிடம், சிங்காநல்லூர் நகர தி. மு. க. செயலாளர் கோவை க. இரத்தினம் கேட்டுக்கொண்டார்,

இங்கு நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் இது சம்பந்தமான ஒரு மனுவையும் அவர் அமைச்சரிடம் கொடுத்தார்.

கோவை க. இரத்தினம் நேற்று முன்தினம் மீண்டும் அமைச்சரை அரசினர் விடுதியில் சந்தித்து, சிங்காநல்லூர் குடிநீர் பிரச்சினை குறித்துப் பேசினர்.

பொதுத் தேர்தலுக்கு முன்பு பொள்ளாச்சியில் நடைபெற்ற கோவை மாவட்ட தி. மு. க. மாநாட்டில், கோவை சிங்காநல்லூர் நகரக் குடிநீர்த் திட்டம் பற்றி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"பவானி ஆற்றின் மேல் பகுதியில் நெல்லித்துறை என்ற இடத்தில் அணை கட்டி நீரைத் தேக்கிக் கொண்டுவந்தால் சிங்காநல்லூர், கோவை ஆகிய இரண்டு நகரங்களின் குடிநீர்ப் பிரச்சினையையும் தீர்க்கமுடியும் என்று அந்த மாநாடு தீர்மானம் கூறுகிறது; ஆகவே, பொறியியலாளர்களுடனும், முதலமைச்சருடனும் கலந்துபேசி இத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்'' என்று கோவை க. இரத்தினம் அமைச்சரைக் கேட்டுக்கொண்டார்.

வீட்டு வரிப் பிரச்சினை

"நகராட்சி விதித்துள்ள வீட்டு வரியில், அரசாங்கம் கடந்த நான்கு அரையாண்டுகளுக்கு வரி நிவாரணம் அளித்திருந்தது. இந்த நிவாரணம், 1967 மார்ச் 31-ம் நாளுடன் முடிவடைகிறது; இதனை நகராட்சித் தேர்தல்கள் நடைபெறும் வரை நீடிக்கவேண்டும்'' என்றும் அவர் அமைச்சரைக் கேட்டுக்கொண்டார்.

நஞ்சுண்டாபுரம் கிராமத்தை நகராட்சியிலிருந்து நீக்கித் தனி ஊராட்சிமன்றமாக இருக்கச் செய்யவேண்டும் என்று அந்த ஊர் மக்கள் விரும்புவதனால், அப்படியே செய்துவிடலாம் என்று கோவை க. இரத்தினம் அமைச்சரிடம் தெரிவித்துக்கொண்டார்.

இக்கோரிக்கைகளைக் கவனித்து ஆவன செய்வதாக அமைச்சர் உறுதி கூறினர்.

ஆலங்குளம் தொகுதியில் ஆலடி அருணாவுக்கு வரவேற்பு

அண்ணாமலைப் புதூரில் ஆலங்குளம் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் ஆலடி அருணா அவர்களுக்கும் பொதுமக்கள் சார்பில் 10—3—67 மாலை 5 மணிக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

அண்ணாமலைப் புதூரில் பள்ளிக் கட்டிடத்தை புதுப்பிக்க ஆவன செய்வதாகவும், தி மு. கழக அமைச்சரவை உழவர்கள் துன்பத்தை நீக்க முயலும் என்றும் ஆலடி அருணா அவர்கள், வாக்காளர்களுக்கு நன்றி கூறுகையில் குறிப்பிட்டார்.

மாலை 6 மணிக்கு மேல் மருதப்பபுரத்தில், தோழர் அருணாவிற்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. ஊராட்சித் தலைவர் விழாவிற்குத் தலைமை வகித்தார்.

மாலை 6—30 மணிக்கு மேலக்கலங்களில் தோழர் ஆலடி அருணா ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்; ஊராட்சித் தலைவர், வரவேற்பு இதழ் வாசித்தளித்தார்.

இரவு 8 மணிக்கு கீழக்கலங்களில் இளைஞர் மன்றச் சார்பில் தோழர் அருணாவுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. ஊராட்சித் தலைவர், உறுப்பினர்கள் ஆகியோர் மாலை அணிவித்தனர்.

இரவு 9-மணிக்கு மோச்சக் குளத்தில் தோழர் அருணாவிற்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

இரவு 10 மணிக்கு குக்குமணியாபுரத்தில், துவக்கப்பள்ளியில் அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. ஆலங்குளம் பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கு அருணா மாலை அணிவித்தார்.

இரவு 10-30 மணிக்கு கடம்பாபட்டியில் வரவேற்பு அளிக்கப்பட்டது. மாணவர்கள் வெற்றிப் பாடல்களைப் பாடினர்; விழாவிற்குத் திரு. சுப்பையா பாண்டியன் தலைமை வகித்தார்.

இரவு 11 மணிக்கு வெள்ளிலங்கபுரத்தில் ஆலடி அருணாவிற்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

இரவு 12 மணிக்கு ரெட்டியார் பட்டியில்திரு.அப்பாதுரைதலைமையில் விழா நடைபெற்றது. தமிழாசிரியர் சோமசுந்தரம் வரவேற்றார்; கழகச் செயலாளர் சின்னத்துரை, கிராமப் பெரியவர்கள், தோழர் அருணாவிற்கு மாலை அணிவித்தனர்.

இரவு 1 மணிக்கு காவலர்குறிச்சியில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இரவு 2 மணிக்கு கடங்குளேரியில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

விடியற்காலை 3 மணிக்கு வீராணத்தில் மேளவாத்தியங்களுடன் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். விழாவிற்கு ஊராட்சித் தலைவர் தலைமை வகித்தார்.

11—3—67 மாலை 5 மணிக்கு மாருந்தையில் வரவேற்பு அளிக்கப்பட்டது. தோழர்கள் பாலசுப்பிரமணியம், சந்திரபாலன் ஆகியோர் தோழர் அருணாவைப் பாராட்டிப் பேசினர்.

மாலை 6 மணிக்கு ஐயனார்குளத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது. ஊராட்சித் தலைவர் தலைமை வகித்தார்.

இரவு 7 மணிக்கு சிவலார்குளத்தில் வரவேற்பு கொடுக்கப்பட்டது. இந்து தொடக்கப்பள்ளி மாணவர்களின் கோலாட்டம் நடைபெற்றது. தங்க மோதிரம் அணிவிக்கப்பட்டது.

இரவு 8 மணிக்கு ஆவுடையப்பட்டி ஆதி திராவிட மக்கள் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

பீடித் தொழிலாளர் பிரச்சினை

இரவு 9 மணிக்கு ஆலங்குளத்தில் வரவேற்பு ஊர்வலம் நடைபெற்றது.

ஏறத்தாழ 5,000 பேர் கூடியிருந்த வெற்றிவிழாக் கூட்டத்தில் பீடித் தொழிலாளர் பிரச்சினைக் குறித்து உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுப்பதாகக் கூறி, தோழர் அருணா நன்றி கூறினர்.

இரவு 11 மணிக்கு துத்தி குளத்தில் ஊராட்சி மன்றத் தலைவர் தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றது.

இரவு 12 மணிக்கு கழநீர் குளத்தில் பாராட்டு விழா நடைபெற்றது.

இரவு 1 மணிக்கு வீரகேரளம் புதூரில் வரவேற்பு—ஊர்வலம் நடைபெற்றது. பொதுக் கூட்டத்திற்கு தோழர் சாமிநாதன் தலைமை தாங்கினர். தோழர் ஆலடி அருணா நன்றி தெரிவித்து பேசினர்.

12—3—67 மாலை 6 மணிக்கு மனங்குன்றுபுரத்தில் ஆலடி அருணாவிற்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

இரவு 7 மணிக்கு அச்சம் குன்றத்தில் வரவேற்பு தரப்பட்டது.

இரவு 8 மணிக்கு கருவந்தாவில் வரவேற்பு ஊர்வலம் நடைபெற்றது. தோழர் தங்கசாமி தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றது.

இரவு 9 மணிக்கு சோலைச்சேரியில் வரவேற்பு அளிக்கப்பட்டது. ஊராட்சித் தலைவர் மாலை அணிவித்தார்.

இரவு 10 மணிக்கு ஊத்துமலையில் வரவேற்பு அளிக்கப்பட்டது, 3000 மக்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

இரவு 12 மணிக்கு நெட்டூரில் பாராட்டு விழா நடைபெற்றது. ஊராட்சித் தலைவர் கந்தசாமி தேவர் தலைமை வகித்தார்.

இரவு 1 மணிக்கு அருணாசலபுரத்தில் பாராட்டு விழா நடைபெற்றது.

இரவு 2 மணிக்கு சுப்பையாபுரத்தில் பாராட்டு விழா நடைபெற்றது.

இரவு 2—30 மணிக்கு மருதப்புரத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

விடியற்காலை 3 மணிக்கு குறிப்பன் குளத்தில் சிறப்பான வரவேற்பு—ஊர்வலம் நடைபெற்றது.

விடியற்காலை 3—30 மணிக்கு நாரணபுரத்தில் பாராட்டு விழா நடைபெற்றது.

விடியற்காலை 4 மணிக்கு கிடாரக் குளத்தில் திரு. நமச்சிவாயம் தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றது.

விடியற்காலை 5 மணிக்கு கீழ்ப்பட்ட முடையார் புரத்தில் வரவேற்பு—ஊர்வலம் நடைபெற்றது.

புதுவை வட்டத்தில் காங்கிரசு குண்டர்கள் வெறிச்செயல்

கழகத் தோழர்கள் மூவர் தாக்கப்பட்டனர்

புதுவை வட்டம் வாகூர் திருமாம்பாக்கம் தி.மு.க. தோழர்களான இராமானுசம், தாமோதரன், ரங்கநாதன் மூவரையும் 15—4—67 அன்று காங்கிரசு உறுப்பினரும் வாகூர் நகரசபை உறுப்பினருமான முத்து புருஷோத்தம ரெட்டியார் என்பவர் ஏழெட்டுக் குண்டர்களைக் கொண்டு தாக்கியதால் தாமோதரன் என்பவருக்கு மண்டை உடைந்துவிட்டது; இரங்கநாதனுக்குக் கை எலும்பு முறிந்துவிட்டது; இராமானுசம் உடம்பெல்லாம் காயம் ஏற்பட்டு இரத்தவெள்ளத்தில் மூழ்கிகிடந்தார்.

செய்தி அறிந்ததும் வட்டச் செயலாளர் எம். ஏ. சண்முகம் விரைந்து சென்று கழகத் தோழர்களைத் தமது வண்டியில் ஏற்றி முதல் உதவிக்காக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்.

பின்னர், சர்க்கிள் இன்ஸ்பெக்டரிடம் நிலைமையை எடுத்துச் சொன்னவுடன், அவர், சம்பந்தப்பட்ட நபர்களைக் கைது செய்து பொறுப்பில் விட்டிருக்கிறார்.

பின்னர் வட்டச் செயலாளர், புதுவை மாநிலப் போலீசு சூப்பிரண்டெண்டிடம், நடைபெற்ற கலவரத்தைக் குறித்து புகார் செய்தார்; இனியும் கழகத் தோழர்களுக்கு இத்தகைய நிலைமை ஏற்படாமல் இருப்பதற்கு வேண்டிய பாதுகாப்பு கொடுக்கும்படியும் கேட்டுக்கொண்டார்; ஆவன செய்வதாகக் கூறி உடனடியாக பாதுகாப்புஏற்பாடு செய்திருக்கிறார். போலீசு சப்-இன்ஸ்பெக்டர் பர்சையப்பனும் பாதுகாப்புக்குத் துணை நின்றார்.

மேற்கண்ட குண்டர்களின் மீது வழக்குத் தொடர எம். ஏ. சண்முகம் ஆவன செய்துவருகிறார்.

மைசூர் — மகாராட்டிர எல்லைச் சிக்கல்

பெங்களூர், ஏப். 20—

"மகாராட்டிர மாநிலத்தில் கன்னடம் பேசுவோர் மிகுதியாக வாழும் சில பகுதிகள் இருக்கின்றன. அவற்றை மைசூருடன் இணைக்க வேண்டும்"

என்று கருநாடக மாநில அரசு அறிவித்துள்ளது.

மைசூர் — மகாராட்டிரம், மைசூர்—கேரளம் எல்லைச் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஒருவர் குழுவில் இடம்பெற்றுள்ள மகாஜனிடம் இக்கோரிக்கை கருநாடக அரசால் தெரிவிக்கப்பட்டது.

சோலாப்பூர், அகால்கோட், ஜாட், சண்ட்காட் ஆகிய நான்கு வட்டங்களைத் தன்னுடன் சேர்க்க வேண்டுமென்று கருநாடக அரசு வாதிடுகிறது.

கருநாடக அரசின் சார்பில் மார்ச் 31-ல் மகாஜன் குழுவிடம் இப்பகுதிகள் தனக்குரியவையே என்று அறிவித்துள்ளதாம்.

மகாஜன் இப்போது மைசூர் சென்றுள்ளார்; அரசின் விவாதங்களைக் கேட்பார்; சிக்கல் பற்றிய விவாதங்களை அவர் பரிசீலிப்பார்.

சென்னையில் தீ விபத்துக்கள்

சென்னை, ஏப். 20—

நேற்று முன்தினம் சென்னை எழும்பூர் பகுதியில் ஒரு தீவிபத்து நடைபெற்றது.

நேற்று கீழ்ப்பாக்கத்தில் நேரு பூங்கா அருகே இன்னொரு தீ விபத்து நடைபெற்றது.

இந்த விபத்தினால் 75 வீடுகள் தீக்கிரையாகின.

இதனால் ரூ. 27,000 இழப்பு ஏற்பட்டிருக்குமென்று தெரிகிறது.

அமைச்சர் கருணாநிதி

பொதுமக்கள் காணும் நேரம்

தமிழகப் பொதுப் பணித்துறையமைச்சர் திரு. கருணாநிதி அவர்களைப் பொதுமக்கள் கண்டு பேசுவதற்குக் கீழ்க்கண்டவாறு நேரம் குறிப்பிடப்பட்டுள்ளது:—

சட்டமன்றம் கூடாத நாட்களில் வீட்டில் காலை 8-மணி முதல் 9-30 மணி வரையிலும், அலுவலகத்தில் காலை 10 முதல் 11-30 மணி வரையிலும், மாலை 3-30 முதல் 5 மணி வரையிலும் காணலாம்.

மலேசியாத் தமிழர் கலை முயற்சி

முதலமைச்சர் அண்ணா—நெடுஞ்செழியன் பாராட்டு

சென்னை, ஏப். 20—

நேற்று இரவு 9 மணிக்கு, மியூசியம் அரங்கில், மலேசிய நாடகக் குழுவினரின் 'இரத்தப் பேய்' என்னும் நாடகம் நடைபெற்றது.

தலைமைவகித்த முதலமைச்சர் அண்ணா அவர்கள், மலேசியத் தமிழர்களின் கலை முயற்சியினைப் பாராட்டி, 'மேலும் சீர்திருத்தக் கருத்துக்களைக்கொண்ட நாடகங்களை நடத்த வேண்டும்' எனக் கேட்டுக்கொண்டார்.

நாடகக் குழுவினரைப் பாராட்டி கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் பேசினார்.

பிரிட்டனில் நிறவெறி!

தடுப்புச் சட்டம் இயற்றியும் பலனில்லை

நிறவேற்றுமை பாராட்டும் மனப்பான்மையும், இனவெறியும் பிரிட்டனில் மிகவும் பயங்கரமாகத் தலைவிரித்தாடுகின்றன!

"பிரிட்டனில் தாண்டவமாடும் இனவெறி தடுத்து நிறுத்தப்படாவிடில், அமெரிக்காவைப் போல் இங்கேயும் பயங்கரமான இனக் கலவரங்கள் மூளும்"

என்று, காமன்வெல்த் அகதிகள் வேலை தேடும் சங்கத் தலைவர் கூறியுள்ளார்.

இன நட்புறவுக் குழு காமன்வெல்த் அகதிகள் நல தேசியக் குழு, அரசியல்—பொருளாதாரத் திட்டக் குழு ஆகிய குழுக்கள் பிரிட்டனில் நடத்திய ஆய்வின் மூலம் மேற்கண்ட உண்மை புலப்படுத்தப்பட்டுள்ளது.

1965-ஆம் ஆண்டில் பிரிட்டனில் ஏற்பட்ட இன நட்புறவுச் சட்டம், உணவு விடுதி—கலை அரங்கு ஆகிய பொது இடங்களில் மட்டும் இனவெறி தாண்டவமாடக் கூடாது.

இன்று வெளியான அரசியல்—பொருளாதாரத் திட்டக் குழுவின் அறிக்கையில் இச்சட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது,

குடியிருப்புகள், அலுவலகங்கள், காப்பீட்டுக் கழகங்கள், பொழுதுபோக்கும் இடங்கள் ஆகியவற்றிலும் இனவெறி தடுக்கப்பட வேண்டுமென்று அவ்வறிக்கை கூறுகிறது.

இன நட்புறவுக் குழுத் தலைவர், சென்ற ஆண்டில் இன வெறி பற்றிய 333 வழக்குகள் தம்மிடம் வந்தனவென்றும், அவ்வழக்குகளில் 72 சதவீதக் குற்றவாளிகள் சட்டத்தின் பலவீனத்தால் தப்பித்துவிட்டனரென்றும் கூறினார்.

"இன நட்புறவுச் சட்டம் பயன்தரத்தக்க விதத்தில் திருத்தியமைக்கப்பட வேண்டும்" என்று அவர் கூறினார்.

அரசியல்—பொருளாதாரத் திட்டக்குழு, இனவெறியால் பாதிக்கப்பட்ட 1,000 அகதிகளையும் 5,000 உழவர்களையும் நேரில் சந்தித்ததாம்.

கிணறு வெட்ட உழவர்களுக்குப் பண உதவி

உ. பி. அரசின் புதிய ஏற்பாடு

கிணறு வெட்ட உழவர்களுக்கு உதவி செய்வதற்காகப் புதிய உ. பி. அரசு ரூ. 5 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

மாவட்ட நீதிபதிகள் இப்பணத்தை உழவர்களுக்கு வழங்குவர்.

கிணறு வெட்டுவதற்காக ஒவ்வொரு உழவருக்கும் ரூ. 20 அளிக்கப்படும்.

முழுத் தொகையாக இப்பணம் உழவர்களை அடைவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

கிணறு வெட்டியதைச் சான்றுடன் நிரூபிக்காதவர்களுக்கு மேற்கொண்டு இவ்வுதவி செய்யப்படமாட்டாது.

'மே' நாள் விடுமுறை

கேரளம்-மே. வங்கம் அறிவிப்பு

கேரள அரசாங்கமும், மேற்கு வங்க அரசாங்கமும் மே முதல் நாளை பொது விடுமுறையாக அறிவிப்பதென முடிவு செய்துள்ளன.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பெறுகிறது.

கட்டுப்பாடு நீங்குமா?

அண்ணா தரும் விளக்கம்

"கட்டுப்பாடுகள் இருப்பதுதான் பஞ்சத்துக்குக் காரணம் என்று சொல்லுகிறார்கள். பீகாரிலே பஞ்சம் ஏற்பட்டதற்குக் கட்டுப்பாடுகளா காரணம்? தங்கு தடையின்றி உணவுப் போக்குவரத்து இருந்தபோதுதான் அங்கே பஞ்சம் ஏற்பட்டது. விளைவு போதுமானதாக இல்லாததனால்தான் அங்கே பஞ்சம் ஏற்பட்டது.

"கட்டுப்பாடுகள் தேவையில்லை என்பதை இந்த அரசு உணர்ந்தால், உடனடியாக நீக்கத் தயங்காது.

"கொள்முதல் செய்யவேண்டும் என்று சொன்னவுடன், 'கொள்முதல் கூடாது' என்று ஏடுகளில் பலர் எழுதினர். சில இதழ்களில், ஆசிரியருக்கு எழுதப்பட்ட கடிதங்கள் முழுவதும் கொள்முதலைப் பற்றியவைகளாகவே இருந்தன!

"ஆனால், நிலைமை இப்போழுது அப்படி இல்லை. சென்ற வாரத்தில் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள கடம்பத்தூர் என்ற ஊரில் சில நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டேன். அந்த ஊரில் பெரும் நிலச்சுவான்தாரராக இருக்கும் சப்பராய முதலியார் என்பவர்—முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலத்துக்கு வேண்டியவர்—கொள்முதலை ஆதரித்துப் பேசினார்.

"'போதும்' என்ற அளவுக்கு வந்து—இனிமேல் பற்றாக்குறை நிலை ஏற்படாது என்று அரசாங்கம் உணர்ந்துகொண்டவுடன், கட்டுப்பாடுகள் மெல்லமெல்ல நீக்கப்படும். கட்டுப்பாடுகளை நீடித்து நிரந்தரமாக வைத்திருப்பது என்பது அரசாங்கத்தின் கொள்கை அல்ல."

—(பங்கீட்டுக் கடை வியாபாரிகள் கூட்டத்தில்)

சென்னை நகரப் பங்கீட்டு வியாபாரிகள் சங்க ஆண்டுவிழா

முதலமைச்சர்—உணவமைச்சர் பங்கேற்பு

சென்னை நகர உணவுப் பங்கீட்டுக் கடை வியாபாரிகள் மத்திய செயற்குழுவின் முதலாவது ஆண்டுவிழா 18—4—67-ல் மெமோரியல் ஹாலில் நடைபெற்றது.

ஆண்டுவிழாவுக்கு திரு. பி. ஏ. என். இராசரத்தினம் தலைமை வகித்தார்.

செயலாளர் எம். சாமுவேல் துரைராஜ் வரவேற்புரை நிகழ்த்தினார்.

அடுத்து தலைவர் சொற்பொழிவு நிகழ்த்திய பின்பு திரு. கணேசன், உணவு அமைச்சருக்கு வரவேற்பிதழ் வாசித்தளித்தார்,

செயற்குழுவின் ஆண்டறிக்கையை பொதுச் செயலாளர் எஸ். விநாயக நாடார் படித்தார்.

வியாபாரிகளின் விண்ணப்பத்தை செயற்குழுவின் துணைத் தலைவர் திரு. ஜி. வேங்கடேசன் படித்தார்.

அடுத்து உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் தொடக்கவுரை ஆற்றினார்.

அடுத்து ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம். எல். ஏ. உரையாற்றினார்.

திரு. எஸ். ஏ. பாண்டியன் முதலமைச்சர் அண்ணாவுக்கு வரவேற்பு வாசித்தளித்தார்.

இறுதியாக முதலமைச்சர் அண்ணா அவர்கள் பேருரை நிகழ்த்தினார்கள்.

திரு. பண்டியன் நன்றி கூறினார்.

வியாபாரிகளுக்கு!

"பொதுவாக எல்லா வியாபாரிகளுக்கும் ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன்; சர்க்கார் விதித்துள்ள சில விதிமுறைகள்—திட்டங்கள்—கட்டுப்பாடுகள் தவறு என்றால் வாதாடுங்கள்; உங்கள் குறைகளை எடுத்துரையுங்கள்; நீங்கள் கூறுவதை இந்த அரசாங்கம் பரிசீலிக்கும்.

"ஆனால், அரசாங்கம் சில கட்டுப்பாடுகளை விதித்துவிட்ட பிறகு, அதில் சந்து இருக்கிறதா என்று தேடாதீர்கள்!

"அரசினரின் செயல்கள் ஏழெட்டுப் பேரினால் மட்டுமே வெற்றி பெற்றுவிட முடியாது; அனைவருடைய ஒத்துழைப்பாலும்தான் வெற்றிபெற முடியும். ஆகவே உங்களுடைய நல்லெண்ணத்தையும் ஒத்துழைப்பையும் தரும்படிக் கேட்டுக் கொள்கிறேன்."

—முதலமைச்சர் அண்ணா

(பங்கீட்டுக் கடை வியாபாரிகள் சங்கக் கூட்டத்தில்)

முன்னூர்குறிச்சியில் தீவிபத்து

சட்டமன்ற உறுப்பினர் பார்வையிட்டார்

செந்துறை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள முன்னூர்குறிச்சிக் கிராமத்தில் தீப் பிடித்து 22 வீடுகள் சேதம் அடைந்தன.

அல்லலுற்ற மக்களை, ஆண்டிமடம் சட்டமன்ற உறுப்பினர் கே. என். இராமச்சந்திரன் சென்று பார்வையிட்டார்.

உதவிப் பணம் வழங்கவும், உடை—உணவு உதவி செய்யவும் சட்டமன்ற உறுப்பினர் உடனிருந்து ஆவன செய்தார்.

நாகர்களைத் தூண்டிவிடும் வேலையில் சீனா?

"கடந்த 14 ஆண்டுகளாக இந்திய அரசுக்கும்—நாகர்களுக்கும் இடையில் தீராத பகையும், பூசலும் வளர்ந்துவந்திருக்கும் நிலையில், இப்போது செஞ்சீனாவும் இச்சிக்கலில் தலையிட ஆரம்பித்துள்ளது"

என்று இலண்டனிலிருந்து வெளியாகும் 'அப்சர்வர்' ஏடு எழுதியிருக்கிறது.

அந்த ஏடு மேலும் எழுதியிருப்பதாவது:—

"நாகாலாந்து சிக்கல் அபாயமானதாக மாறிவிட்டதாக டில்லியிலும், பீகிங்கிலும் கருதப்படுகிறது.

"இந்தியாவின் கிழக்குப் பகுதியில் பிற்போக்குத் தன்மைமிக்க இந்திய அரசை எதிர்த்துப் படை பலத்தோடு போராடும் நாகர்களின் வலிமை மேலும் அதிகரித்துள்ளது"

என்றும் பீகிங் வானொலி அறிவித்தது.

ஜிரிபாம், டாமென்ங்லாங் ஆகிய இடங்களில் நாகர்கள் வீரப் போராட்டம் நிகழ்த்தியது பற்றி அச்செய்தியில் வர்ணிக்கப்பட்டது.

"அடக்குமுறை கையாளப்படும் இடங்களில் புரட்சி மனப்பான்மை வளருவது இயற்கையே. தனிப்பட்ட வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட இன மக்களின் கலாச்சாரத்திற்கு எதிரான கொள்கையை இந்திய அரசு கடைபிடித்ததன் விளைவாகவே நாகாலாந்தில் புரட்சி ஏற்பட்டது.

"1953-ல் இந்தியக் கூட்டாட்சிக்குள் அனைத்து உரிமைகளையும் பெற்ற தனி மாநிலமாக நாகாலாந்து விளங்க வேண்டுமென்ற கொள்கை ஏற்கப்படாததால் இப்பகை வளர்ந்தது"

என்றெல்லாம் பீகிங் வானொலி அறிவித்திருக்கிறது.

நாகர்களுக்குப் போர்ப் பயிற்சி மட்டும் சீனா அளிக்கிறதா?—அல்லது அவர்களது கொள்கைகளிலும் தனக்கேற்ற மாற்றங்களைப் புகுத்த விரும்புகிறதா?—என்பது பற்றித் தெளிவாகத் தெரியவில்லை.

அவர்கட்டும் நமக்கும் இதுதான் வேறுபாடு!

"ஆங்கிலேய நாட்டில் போர்க்காலத்தில் துணிக்குக்கூடக் கட்டுப்பாடு கொண்டுவந்தார்கள்.

"'துணியை அதிகமாக நாம் பயன்படுத்தினால் அந்நியச் செலாவணி வீணாகுமே' என்று ஆங்கிலேயர்கள், முழுக் கைச் சட்டையை, அரைக் கைச் சட்டையாகக் குறைத்துக் கொண்டார்கள்!

"வேறு சிலர், 'சட்டையின்மீதுதான் கோட்டுப் போட்டுக் கொள்கிறோமே; சட்டையின் பின்பக்கத்தில் ஏன் துணி வைத்துத் தைக்கவேண்டும்' என்று எண்ணி, முன்பக்கத்தில் மட்டும் துணியை வைத்துத் தைத்துக்கொண்டு, பின் பகுதியில் ஒன்றுமில்லாத சட்டையை அணிந்தார்கள்.

"நம் நாட்டில் அதுபோன்ற காட்சிகளைப் பார்க்க வேண்டுமென்றால், திரைப் படங்களில்தான் பார்க்கமுடியும்!

"போர்க் காலத்தில் இங்கிலாந்து நாட்டு மக்களின் செயல்கள் அப்படி இருந்திருக்கின்றன!

"ஆனால் நம் நாட்டு மக்களில் பொது விதிகளை மீறுவதில் மிகச் சாமர்த்தியசாலிகளாக இருக்கிறார்கள்.

"யாருக்கும் கிடைக்காத பொருள் நமக்குக் கிடைக்கிறது என்பதைக் காட்டிக்கொள்வதில் பலருக்குப் பெருமை!

"'அமுல் டின் கிடைக்கவில்லையா? நான் வாங்கிக் காட்டுகிறேன் பார்; மூன்று டின்னா வேண்டும்—முடியாது; இரண்டு டின் வாங்கித் தருகிறேன்'—'ஹார்லிக்சா வேண்டும்? நாளை காலையிலே வந்து என்னைப் பார்'—'புதிய படத்திற்கு முதல் நாள் முதல் காட்சிக்கு டிக்கெட் கிடைக்கவில்லையா? என்னிடம் சொல்லியிருக்கக்கூடாதா? என்னிடம் 7 டிக்கெட்டுகள் இருந்தன'—இப்படிப் பெரிய விஷயத்திலிருந்து சினிமா டிக்கெட்வரை மற்றவர்களுக்குக் கிடைக்காதது தமக்குக் கிடைக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் நம் நாட்டு மக்களுக்கு மிக விருப்பம்!

"சட்டத்திலுள்ள சந்துகளைக் கண்டுபிடிப்பதிலும் நம் நாட்டு மக்கள் மிகுந்த கவனம் செலுத்துகிறார்கள்; இந்த நிலை மாறவேண்டும்."

—முதலமைச்சர் அண்ணா

(பங்கீட்டுக் கடை வியாபாரிகள் கூட்டத்தில்)

பொய்ச் செய்திக்கு மறுப்பு

"17—4—67 (வெளியூர் பதிப்பு) 'நவசக்தி' இதழில், 'இடதுசாரி கம்யூனிஸ்டு பாலசுப்பிரமணியம் எம்.எல்.ஏ. வீட்டுமுன் உணவு கேட்டு பெண்கள் ஆர்ப்பாட்டம் செய்ததாகக் கட்டம் கட்டி ஓர் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. இது வடிகட்டிய பொய் செய்தியாகும்.

"திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் 5—4—67 முதல் திண்டுக்கல் நகரில் இல்லை; கல்கத்தாவில் நடைபெறும் இடதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டிக் கூட்டத்தில் கலந்துகொண்டுள்ளார்" என்று சட்டமன்ற உறுப்பினர் என். வரதராசன் அறிவிக்கிறார்.

தண்டலத்துக்கு அமைச்சர் வருகை

குன்றத்தூர் தொகுதியைச் சேர்ந்த தண்டலத்திற்கு அமைச்சர் முத்துச்சாமி 21—4—67 மாலை 5-மணிக்கு வருகிறார்; அப்போது அவருக்குச் சிறப்பான வரவேற்பளிக்க ஏற்பாடாகியுள்ளது.

தண்டலத்தில், அமைச்சர் புதிய பள்ளிக் கட்டிடத்தைத் திறந்துவைக்கிறார்.

உணர்வோர் உள்ளம்

'கொடுமை'கள் நீங்க நல்லதோர் அறிகுறி!

10—4—67 இரவு தமிழக அரசாங்கப் போக்குவரத்துத் துறை—தண்டையார்ப்பேட்டை டிப்போவில் நடைபெற்ற தொழிலாளர் வரவேற்பு விழாவில் கலந்து கொண்ட போக்குவரத்துத்துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை, தொழிலாளர்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் இருக்கிறதென்பதைப் புலப்படுத்தியது.

அவர் ஆற்றிய உரையில் குறிப்பாக அநியாயமாக வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களின் சிக்கல்களை மறு ஆய்வு செய்து அவர்களுக்கு மறுபடியும் வேலை வழங்குவது என்பதே ஆகும். இதன் மூலம் மாண்புமிகு அமைச்சர், நூற்றுக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை கொடுப்பது மட்டுமில்லாமல், டிரைவர்கள்—கண்டக்டர்கள் ஊதிய நாளன்று பல டிப்போக்களில் கையேந்தி நிற்கின்ற குடும்பங்களின் வயிற்றில் பால் வார்த்திய செய்தியை அறிவித்தார்.

குறிப்பாக 'ஷார்ட்டேஜ்' என்ற ஒரு சிறு குற்றத்திற்காகக் கடந்த 10 ஆண்டுக் காலத்திற்கு மேலாக ஏறக்குறைய 100 கண்டக்டர்களை நிர்வாகம் வேலை நீக்கம் செய்துவிட்டிருக்கிறது; இவர்களில் பலபேர் மிக நீண்டகாலமாகப் பணியாற்றியவர்கள்.

'ஷார்ட்டேஜ்' என்பது என்ன? இது கண்டக்டர்களின் தினசரி பஸ் வசூலில் எப்படி வருகிறது?

கண்டக்டர் வேலை என்பது ஒரு நிலையான இடத்தில் — தலைக்கு மேலே அதிக வெளிச்சமுள்ள மின்சார பல்புகளைப் போட்டுக் கொண்டு டிக்கட் வசூல் செய்வது போல் அல்ல; சில பஸ்களில் எரியும் விளக்குகளின் வெளிச்சம் மின்மினிப் பூச்சியின் வெளிச்சத்துடன் போட்டி போடுவதுபோல் இருக்கும். இந்த வெளிச்சத்தில் கண்டக்டர் டிக்கெட்டுகளைக் கொடுத்து, சில்லரைகளை வாங்கும் போது, அவரை அறியாமலேயே சில செல்லாத நாணயங்களையும், கிழிந்துபோய் மெலிய காகிதத்தால் ஒட்டப்பட்ட ரூபாய் நோட்டுகளையும் வாங்கிவிட வேண்டிய நிலை ஏற்படும். இந்த ஏமாற்றம், கடமை முடிந்து அவர் டிப்போவிற்குச் சென்று வசூல் 'கவுண்டரில்' வைத்து எண்ணும்போதுதான் தெரியும்!

இதனால் ஏற்படும் குறைவைத் தன்னுடைய 'பேட்டா' பணத்திலிருந்து (ஏதேனும் மிச்சமிருந்தால்) கட்டிவிடுவார்கள். 'பேட்டா' செலவாகிவிட்டிருந்தால், அது குறைவாகிவிடும்.

இன்னும் சில பயணிகள் கொடுத்த 4 அணா என்றும், கண்டக்டரிடம், ஒரு ரூபாய் கொடுத்ததாகச் சத்தியம் செய்து மீதிச் சில்லரையை வாங்கிக் கொண்டு போய் விடுவதும் உண்டு!

புது கண்டக்டர்களைச் சில புது ரூட்'களில் போட்டு விட்டால், அவருக்கு ஸ்டேஜ் ஒன்று புரியாமல் திக்குமுக்காடி, டிக்கெட்டுகளைத் தாறுமாறாகக் கிழித்து விடுவார்.

கண்டக்டர்களிடம் விற்பனைக்காகக் கொடுக்கப்படும் டிக்கெட் பண்டில்களில் சில வரிசை எண் ஒழுங்காக இல்லாமல், மேலும் கீழும் மாறி மாறி இருக்கும். சிலவற்றில் சில டிக்கெட்டு களே இருக்காது. இதுபோல் பல டிக்கெட் பண்டில்களைக் கண்டக்டர்கள் எழுத்து மூலமாக நிர்வாகத்திற்கு 'சரண்டர்' செய்திருக்கிறார்கள். இவை அத்தனைகளாலும் கண்டக்டர்களுக்கு 'ஷார்ட்டேஜ்' ஏற்படுவதுண்டு.

எதிர்பாராத விபத்துக்களைத் தடுப்பதற்காக டிரைவர் போடும் பிரேக்கினால் கண்டக்டர் நிலைகுலைந்து கீழே விழுந்து பையிலிருந்த பணம் சிதறி விட்டால், இரவு வேளைகளில் எல்லாவற்றையும் பொறுக்குவதென்பது மிகக் கடினம். இதனாலும் குறைவு ஏற்படும். இதுபோன்ற தொல்லைகள் கண்டக்டர்களுக்கு நிறைய உண்டு.

இவைபோன்றவைகளை நன்கு அறிந்து எங்கள் குறைகளைத் தீர்க்க முன்வந்திருப்பதையே மாண்புமிகு அமைச்சர் கருணாநிதி அவர்களின் உறுதிமொழி காட்டுகிறது என்பதை, அரசாங்கப் போக்குவரத்துத் தொழிலாளர்களாகிய நாங்கள் ஒவ்வொருவரும் உணருகிறோம்.

இருபது ஆண்டுகளாக அடக்கு முறையாக இழைக்கப்பட்டுள்ள கொடுமை மெல்ல மெல்ல—படிப்படியாக அகற்றப்படும் என்பதற்கு நல்லதோர் அறிகுறியை அமைச்சர் அவர்கள் காண்பித்திருக்கிறார்கள்.

அமைச்சரின் நல்ல மனத்துக்கும் சிறந்த முயற்சிக்கும் எங்களுடைய எல்லா வகையான ஒத்துழைப்பும் என்றைக்கும் இருக்கும் என்று உறுதி கூறுகிறோம்.

எஸ். டி. இராசசேகரன்,
டைம்கீப்பர், அரசாங்கப் போக்குவரத்துத் துறை,
சென்னை.

கைத்தறி பொருட்காட்சி
34, பாந்தியன் சாலை, எழும்பூர்-சென்னை-8.
விசேஷ தள்ளுபடி 10%

நிகழ்ச்சி நிரல்

21—4—67 வெள்ளி
மாலை 6-30 மணி:
தலைவர்: திரு. சி.என். அண்ணாதுரை எம்.ஏ., முதலமைச்சர்
பேச்சாளர்: புலவர் திரு. கே. கோவிந்தன் எம்.ஏ., பி.ஓ.எல். உதவி சபாநாயகர், சென்னை சட்டசபை
மாலை 7-30 மணி—நாடகம்: 'அடிக்கிற கைதான் அணைக்கும்'- ஸ்ரீ சங்கரதாஸ் நாடகாலயம்

22—4—67 சனி
மாலை 6-30 மணி:
தலைவர்: திரு. பி. முராரி ஐ.ஏ.எஸ், கைத்தறி செயலாளர், சென்னை
பேச்சாளர்: டாக்டர் எம். சந்தோஷம் எம்.பி.பி.எஸ்., எப்.சி.சி.பி., எம்.பி.
மாலை 7-30 மணி—நாடகம்: 'கோபுர வாசல்'—கோ-ஆப்டெக்ஸ் பொழுதுபோக்கு நாடகக் குழு

23—4—67 ஞாயிறு
மாலை 6-30 மணி:
தலைவர்: திரு. டி. என். லட்சுமிநாராயணன் ஐ.ஏ.எஸ்., காரியதரிசி தொழில், தொழிலாளர் & வீடமைப்புத்துறை
பேச்சாளர்: திரு. எம். ஆர். பெருமாள் எம்.ஏ.எல்.டி., பொதுக் கல்வி இயக்குநர், பாண்டிச்சேரி
மாலை 7-30 மணி—நாடகம்: 'இதயக்கோவில்'—கன்னையா கலைக் குழு

கண்காட்சி நேரம் தினசரி மாலை 3-மணியிலிருந்து இரவு 10-மணி வரை

அனுமதி இலவசம்

முதலிலேயே சுருக்கம் செய்யப்பட்டு மீண்டும் சுருங்காத்தன்மை கொண்ட வேட்டிகள், மென்மையாக்கப்பட்டு, மெருகூட்டப்பட்ட வேட்டிகள், இயந்திரம் மூலம் முதலிலேயே சுருக்கப்பட்டு மெருகூட்டப்பட்ட சட்டைத் துணிகள், வாயில்கள், அச்சடிக்கப்பட்ட லான்கள் ஆகிய கைத்தறி ஜவுளி வகைகள் கோ-ஆப்டெக்ஸ் விசேஷ பெவலியனில் மட்டுமே விற்பனைக்குக் கிடைக்கும்

நாளை இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

21—4—67

சோகண்டி

தி. மு. க. சார்பில் சிட்டிபாபு எம்.பி., கோ. கோதண்டம் எம்.எல்.ஏ., செ. கோ. விசுவநாதன் எம்.எல்.ஏ. ஆகியோருக்குப் பாராட்டு; மாலை 6-மணிக்கு; தலைவர்: மு. அண்ணாமலை; பேசுவோர்: தி. ந. சம்பந்தம், செ. சலராமன், ஏ. ஆர். அன்சர் எம்.சி., ஏ. பசுபதி எம்.சி. (இரவு 10-மணிக்கு க. செல்லப்ப நாகர் தலைமையில் 'வெற்றி நமதே' என்னும் நாடகம் நடைபெறும்.)

22—4—67

சென்னை 4-வது வட்டம்

சி. பி. சிற்றரசு படிப்பக ஒன்பதாம் ஆண்டு விழா; மாலை 7-மணிக்கு வண்ணை சஞ்சீவிராயன்கோயில் தெருவில்; தலைவர்: பி. கே. மூர்த்தி; பேசுவோர்: கி. மனோகரன் எம்.பி., மு. வேதாசலம் எம்.எல்.ஏ., புலவர் பொன்னிவளவன், இராசா முகம்மது பி.ஏ.பி.எல்., துரைமுருகன் பி.ஏ., கா. மாறன் பி.ஏ. பி.எல்., கே. எம். கண்ணபிரான்.

இரகுநாதசமுத்திரம்

தி. மு. க. சார்பில் வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் வி. டி. அண்ணாமலை, முத்துலிங்கம், ஆர். ஆர். முனுசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் கோ. விசுவநாதன் ஆகியோருக்குப் பாராட்டு; மாலை 4-மணிக்கு; தலைவர்: ஆர். பி. தாண்டவராய கவுண்டர்; பேசுவோர்: எஸ். கே. ரசாக், டி. கே. துரை, சே. எம். அசன், கே. ஏ. வகாப், கே. எம். ஏ. அப்துல், வி. சி. வச்சிராணி, ஆர். வேணுகோபால், என். முத்துசாமி. (இரவு 10-மணிக்கு தொமுப்பேடு கலைமகள் நாடக மன்றத்தாரின் நாடகம் நடைபெறும்.)

வடசேரி

தி. மு. க. சார்பில் வெற்றி விழா—வாக்காளர்களுக்கு நன்றியறிவிப்பு; மாலை 7-மணிக்கு; தலைவர்: தீ. ப. வடிவேல்; பேசுவோர்: எல். கணேசன் பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ., ஏ. ஆர். மாரிமுத்து எம்.எல்.ஏ., எஸ். டி. சோமசுந்தரம் எம்.பி., கே. என். கோபால், எஸ். கே. மணி, பொ. க. பரமசிவம்.

குழுக் கூட்டம்

"சென்னை 88-வது வட்ட தி. மு. க. பொது உறுப்பினர் கூட்டம், 30—4—67 காலை 10-மணிக்கு 'அன்பகத்'தில் நடைபெறும்; அதுபோது தியாகராய நகர் பகுதிச் செயலாளர் தலைமையில், காலியாக உள்ள நிர்வாகப் பொறுப்புக்களுக்கான இடைத் தேர்தல் நடைபெறும்" என்று, வட்டச் செயலாளர் க. இளமதி அறிவிக்கிறார்.

குளித்தலை தொகுதியில் எம். கந்தசாமி

எம்.எல்.ஏ. சுற்றுப்பயணம்

குளித்தலைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். கந்தசாமி தொகுதி மக்களை நேரில் சந்தித்து நன்றியைத் தெரிவித்துக் கொள்ளவும், அவர்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்து ஆவன செய்யவும் கீழ்க்கண்ட விவரப்படி சுற்றுப்பயணம் செய்கிறார்; அவ்வமயம் ஆங்காங்குள்ள பொதுமக்களும், கழகத் தோழர்களும் தங்களது கோரிக்கைகளை மனுக்கள் மூலமாக அவரிடம் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்:—

21—4—67 காலை 7-மணி: வடசேரி; 8-மணி: காவல்காரம்பட்டி; 9-மணி: கீழ வெளியூர்; 10-மணி: கல்லை; 12-மணி: பாதிரிப்பட்டி; மாலை 5-மணி: நாகனூர்; 6-மணி: தெலுங்குப்பட்டி; 6-30-மணி: நாடக்காப்பட்டி; இரவு 7-மணி: சின்னரெட்டிபட்டி; 8-மணி: தோகமலை நன்றியறிவிப்பு—பொதுக்கூட்டம்.

மராட்டியத் தலைநகரில் தமிழகப் புலவர் குழு

தமிழக அமைச்சர்களும் கலந்துகொள்கின்றனர்

திருச்சி, ஏப். 20—

தமிழகப் புலவர் குழுவின் 21-வது கூட்டம் வருகிற மே மாதம் 20, 21-ம் நாட்களில் பம்பாய் சண்முகா கலையரங்கிலும் 22-ம் நாள் செம்பூர் தமிழ்ச் சங்கத்திலும் நடைபெறுகிறது.

21-ம் நாள் பம்பாய் சண்முகா கலை அரங்கில் புலவர்களின் வரவேற்பு விழாவை, தமிழகக் கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தொடங்கிவைக்க — தமிழகப் பொதுப் பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி வாழ்த்துக்கூற—பம்பாய் மேயர் தலைமைவகிக்க—மகாராட்டிர புலவர் பெருமக்கள் வரவேற்க—தமிழ் விழாவானது பம்பாயில் சிறப்பாக நடை[illegible]

"புலவர் பெருமக்கள் அனைவரும் மே 18-ம் நாள் இரவு 10 மணிக்கு சென்னை—சென்[illegible] இரயில் நிலையத்திலிருந்து பம்பாய் மெயிலில் பயணம் செய்கின்றனர். சென்னையில் உள்ள தமிழ் மன்றங்கள் பல புலவர் பெருமக்களை வழியனுப்பிவைக்கும்" என்று அமைப்பாளர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அறிவிக்கிறார்.

குன்னூர் நகராட்[illegible]

தொகுதி சட்டமன்ற உறுப்பினருக்கு வரவேற்[illegible]

25—3—67 அன்று குன்னூர் நகராட்சிமன்றக் கூட்டம் தலைவர் பி. கே. ஜி. இராசன் தலைமையில் கூடியது; அதுபோது, சட்டமன்ற உறுப்பினர் ஜே. வெங்கடேசன் (சோ. கருணாநாதன்) அவர்களுக்கு வரவேற்பு அளிக்கும் தீர்மானத்தை தேமுர் எஸ். மணி முன்மொழிய—தோழர் எஸ். ஆர். நாகரத்தினம் வழிமொழிய தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

25—4—67 மாலை 3-மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வரவேற்பு விழா நடக்க இருக்கிறது.